
THASS

# சாளரம்

இளையோர் திங்கள் இதழ் • செப்ரெம்பர் 1993 • விலை 12 ரூபா



தந்தையைக் கயவர் கொன்றழித்தனரோ!
தாயும் படுக்கையில் நோயில் வீழ்ந்தனளோ!
தாளா வயிற்றுப் பசியால் உந்தன்
தம்பியர், தங்கையர் வாடுகின்றனரோ!
பள்ளிப் படிப்பை பாதியில் விட்டு
வலையுடன் வந்த நிலை என்ன கூறு

இந்த இதழுடன் இலவச இணைப்பு உள்ளது கேட்டுப்பெற தவறாதீர்கள்

உங்கள் வாகன திருத்த வேலைகளுக்கு

நாட வேண்டிய நிறுவனம்

**செல்வன் டீசல் என்ஜினியர்ஸ்**

டீசல் என்ஜின்கள், லொறிகள் திருத்தியமைக்கவும்,

'பொடி' அமைப்பு வேலைகளுக்கும்

நம்பகத்தன்மை மிக்க நிறுவனம்

# செல்வன் டீசல் என்ஜினியர்ஸ்

பருத்தித்துறை வீதி, கோப்பாய் சந்தி.

---

**ராஜன் கடைச்சல் தொழிற்சாலை**

நீர் இறைக்கும் இயந்திரம்,

இரும்புப் பொருட்களுக்குத் தேவையான கடைச்சல்,

போறிங் வேலைகளுக்கு

நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டிய ஸ்தாபனம்

# ராஜன் கடைச்சல் தொழிற்சாலை

கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

கதவு 03 (20) காற்றுலை 05

# மாணவர்களின் காப்பு

சிறிலங்காவின் சனாதிபதி அவர்கள் அண்மையில் பேசும் போது தமது அரசு கல்விக்காக 1500 கோடி ரூபாக்களை செலவிடுவதாக கூறினார் அதேவேளை காப்புச் செலவுற்கு 2500 கோடி ரூபாவை செவிடுவதாகவும் கூறினார்.

காப்புக்காக சிறீலங்கா அரசு 2500 கோடி ரூபாக்களுக்குமேல் செலவிடுகின்றது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

கல்விக்காக செலவிடப்படும் 1500 கோடி ரூபாவில் மிகவும் குறைந்த அளவே தமிழீழத்தில் செலவிடப்படுகின்றது அதேவேளை பல பாடசாலைகளும் கல்வியோடு தோடர்புடைய நிறுவனங்களும் குண்டு வீச்சால்அழிக்கப்பட்டுள்ளன.

பாடசாலைகளை படையப் பாசறைகளாக பயன் படுத்துவதும், பாடசாலைகள் என்றும் பாராமல் குண்டு வீசி அழிப்பதும், மாணவர்களை கொல்வதும் தொடர்ந்து நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளாகும்.

தமிழீழத்தில் மிகப்பெரிய படைய நடவடிக்கைக்கு சிறீலங்கா அரசு தயாராகின்றது. இதனால் குண்டு வீச்சுக்களும். எறிகணைத்தாக்குதல்களும் மேலும் மேலும் அதிகரிக்கலாம்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு மாணவர்களின் காப்பு குறித்த பெரியதோர் பொறுப்பு இருக்கின்றது. குண்டு வீச்சுக்குள்ளும். எறிகணைத் தாக்குதல்களுக்குள்ளும் பாடசாலைகள் நடைபேறவேண்டும். கல்வி தடைப்பட இடமளிக்கக்கூடாது.

எம்மால் உடனடியாக செய்யக்கூடியவற்றைச் செய்து வைப்பது நல்லதாகும். போதிய காப்புக் குழிகளை அமைக்கவேண்டும். மாணவர்கள். எப்படி எப்படி காப்பு எடுக்கவேண்டும் என அறியத்தரப்படவேண்டும். முதலுதவிகள் குறித்து போதிய அளவில் அறிவுறுத்தல்கள் தரப்படவேண்டும். இப்படி பல தேவையான விடயங்களை பாடசாலைகள் திட்டமிட்டு மாணவர்களு கற்பிக்க வேண்டிய தேவை ஒன்று இன்று உள்ளது.

உடனடியாக இதை செயல்படுத்தும் பணியில் இறங்குவோம்.

## இந்த இதழில்


- ☐ ஆசிரியர் தலையங்கம்
- ☐ கிரிசு காணி
- ☐ உலக அதிசயங்கள் ஏழு
- ☐ வடமராட்சி கிழக்கில் வளராத கல்வி நிலை
- ☐ இளையராஜாவின் 'சிம்பனி' சாதனை
- ☐ கார்பன் பரிசோதனை
- ☐ அறிவுலகம்
- ☐ பதவிக்கு வரும் அரசும் பாழ்படும் விளைநிலமும்
- ☐ பகலவன் பதில்கள்
- ☐ சிறுகதை
- ☐ கணித விஞ்ஞான மூலவள நிலையம் ஒரு நேரடி அனுபவம் (பேட்டி கண்டு எழுதியவர் வல்வை. ந. அனந்தராஜ்)
- ☐ அரும்புகள்


அட்டைப் புகைப்படம்

தி. தவபாலன்

# கிறிசுகாணி

## தீவிரவாத கறுப்பின இளைஞர்களின் நம்பகத்தன்மையுள்ள தலைவனின் மரணம்



தென்னாபிரிக்க கம்யூனிசக் கட்சியின் பொதுச் செயலாளராகவிளங்கிய திரு. கிறிசுகாணி (Chris Hani) அவர்கள் 1993 ஏப்ரல் திங்கள் 10 ம் நாள் சனிக்கிழமையன்று கொல்லப்பட்டார். தென்னாபிரிக்க மக்களின் உணர்வுகளின் சின்னமாக விளங்கிய அவரின் அதிர்ச்சி தரும் மரணம் காரணமாக விடுதலை வேண்டிப் போராடும் மக்கள் தங்கள் தனிப்பெரும் தலைவர் ஒருவரை இழந்துள்ளனர். சோசலிசக் கொள்கையை தீவிரமாக முன்னெடுத்துச்சென்ற ஒருவரை அனைத்துலக கம்யூனிச இயக்கம் இழந்துள்ளது.

தென்னாபிரிக்காவிற்கு சனநாயக ரீதியான ஒரு பேரவையை உருவாக்குவதற்காக நடத்தப்பட்டுவரும் பேச்சுவார்த்தைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும் நோக்கமாகவே இக்கொலைச் சம்பவம் மேற்கொள்ளப் பட்டுள்ளது என்பது தெரிந்த விடயம்.

தீவிரவாதப் போக்குள்ள வலதுசாரி சக்திகள் 'ஆபிரிக்கானர்ர் வீர்சுரன்சு பீவெகிங்' (Atsi Kaner weers rans be weging -AWB) போன்ற புதுமுறையான பாசிச அமைப்புகளுடன் இணைந்துகொண்டு ஆபிரிக்க தேசிய காங்கிரசு, தென்னாபிரிக்க கம்யூனிசக்கட்சி, ஆகியவற்றின் தலைவர்களை திட்டமிட்டுத் தாக்கவும், கொலை செய்யவும் ஆரம்பித்துள்ளன. கிறிசு காணி அவர்களின் கொலை' ஆபிரிக்கானார் வீர்சுரன்சு பீவெகிங்' அமைப்பின் உறுப்பினர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்டது என தற்போது தெரியவந்துள்ளது.

தொழிற்சங்க வாதியாகவும் தென்னாபிரிக்க கம்யூனிசக்கட்சியின் உறுப்பினராகவும் விளங்கிய ஒருவரின் மகனான கிறிசுகாணி அவர்கள் 1943 ல் பிறந்தார். தலைமறைவாக இயங்கிய ஆபிரிக்க தேசிய காங்கிரசின் படைப்பிரிவுடன் 1962ல் இணைந்து கொண்டார். மிகவும் விரைவிலேயே அதன் தீவிரமான தலைவர்களில் ஒருவரானார். தனது சொந்தநாட்டை விட்டு வெளியேறி மற்றைய நாடுகளில் புகலிடம் தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட கிறிசுகாணி, சிம்பாவே நாட்டு மக்கள் நடத்திய போராட்டத்துடன் 1967 ல் தன்னை இணைத்துக்கொண்டார்.

தென்னாபிரிக்காவிற்கு வெளியே இருந்த வேளையிலும் தெற்கு ஆபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலைப் போராட்டத்தில் முக்கியபங்கு வகித்தார். அதனால் அவர் பொற்சுவானாவில் இரு ஆண்டுகள் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். அதன்பின் தென்னாபிரிக்காவிற்குத் திரும்பிய அவர் மிகவும் நெருக்கடியான காலப்பகுதியான 1983 ம் ஆண்டிலிருந்து 1987ம் ஆண்டு வரை தலைமறைவாக இயங்கிவந்த படையத்தில் அரம்பத்தில் அரசியல் கொமிசனராகச்செயற்பட்டார். அதன் பின் தென்னாபிரிக்க கம்யூனிசக்கட்சியின்பொதுச்செயலாளராக வரும்வரை படையத்தின் தலைவராகச்செயற்பட்டார்.

தென்னாபிரிக்க மக்களின் விடுதலை வேட்கையைப் பிரதிபலித்த அவரின் தலைமையின் கீழான ஆயுதப் போராட்டம ஏற்படுத்திய பாரிய தாக்கம் தென்னாபிரிக்க அரசு பேச்சுவார்த்தைக்கு வரவும், ஆபிரிக்க தேசிய காங்கிரசுமீதும், தென்னாபிரிக்க கம்யூனிசக் கட்சி மற்றும் தென்னாபிரிக்க தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின்மீதும் அதுவிதித்த தடையை நீக்கவும், நெல்சன் மண்டேலா அவர்களையும், மற்றைய கைதிகளையும் விடுதலை செய்யவும் வழி வகுத்தமை குறிப்பிடத்தக்கது.

'தீவிரவாத கறுப்பின இளைஞர்களின் நம்பகத் தன்மையுள்ள தலைவன்' என திரு. கிறிசுகாணி அவர்களை நோபல் பரிசுபெற்ற பேராசிரியர் டெசுமன் டூற்று என்பவர் வர்ணித்துள்ளார்.

## ஓவிய வாக்கியம்



இந்த மரத்தின் சோகத்தை
கவிதை வரிகளாக எழுதி அனுப்புங்கள்.

# உலக அதிசயங்கள் 7

## புராதனமானவை

கி.பி. 2ம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க அறிஞர் சிடோன் அன்ரி பேற்றர் என்பவர் புராதன காலத்து கட்டிடங்களில் ஏழைத் தெரிந்தெடுத்து கீழே தந்துள்ளார். ஏழு என்னும் எண் கிரேக்கர்களுக்கு மந்திரசக்தியும், அதிர்ஷ்டமும் கொடுக்கும் எண்ணாகக் கருதபபட்டது.

1. எகிப்திய பிரமிட்டுகள்

4000 ஆண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட இப் பிரமிட்டுகள் மிகப்பழமை வாய்ந்ததும் இன்றும் நிலைத்திருப்பதுமானவை. எகிப்திய மன்னர்கள் அவர்களின் பெறுமதிமிக்க பொருட்களுடனும் திரவியங்களுடனும் அடக்கம் செய்யப்பட்டு அதன்மேல் அமைக்கப்பட்ட கட்டிடங்களாகும்.

2. றோட்சில் பிரமாண்டமான சிலை.

றோட்ஸ் துறைமுகத்தில் ஹீலியஸ் என்றழைக்கப்படும் சூரியதெய்வத்தின் சிலை ஒன்று 105 அடி உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சிலையிலுள்ள கால்களுக்கிடையே கப்பல்கள் இத்துறைமுகத்துக்குள் சென்றுவந்தன என்பது ஐதீகம் கிரேக்கதீவில் கி. மு. 292-280 இல் கட்டப்பட்டு பின்னர் பூமி அதிர்வினால் கி. மு. 224 இல் அழிவுற்றது.

3. பபிலோனிய தொங்கு தோட்டம்.

கி. மு. 6ம் நூற்றாண்டில் இரண்டாம் நெடிசட்நெசார் என்ற மன்னனால் அமைக்கப்பட்டது. மலர்கள், பழங்கள், காய்கறிகள் இத்தோட்டத்தில் படிக்கட்டுமுறையில் பயிரிடப்பட்டன. இட்ரறீஸ் நதிக்கரையோரம் இது காணப்படுகிறது.

4. ஆசியா மைனரிலுள்ள
கலிக்காண சுவிஸ் சிலை.

காறியா நகர மன்னனின் நினைவாக கி. மு. 4 ஆம் நூற்றாண்டில் அவனது கைம்பெண்ணினால் கட்டப்பட்ட இப்பிரமாண்டமான சிலை 15 ஆம் நூற்றாண்டளவில் பூமி அதிர்வினால் அழிக்கப்பட்டுவிட்டது.

5. அலெக்சாந்திரியாவின் கலங்கரை விளக்கம்.

400 அடி உயரத்தில் உலகிலே முதலாவதாக கட்டப்பட்ட கலங்கரை விளக்கம் இது. எகிப்தின் அலெக்சாந்திரியா துறைமுகத்தில் கி. மு. 280 ல் கட்டப்பட்டு 15 ஆம் நூற்றாண்டளவில் அழிபாடுடையதாயிற்று.

6. ஒலிம்பியாவிலுள்ள சீயஸ் சிலை.

கிரேக்க மிகச்சிறந்த தெய்வத்தின் 30 அடி உயரமான கம்பீரமான சிலை இது. மரத்தினால் உருவகப்படுத்தி தந்தத்தினாலும் தங்கத்தினாலும் மூடப்பட்ட இச்சிலை கி. மு. 5ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்டது. நெருப்பினால் பின்னர் 475 இல் (கி. மு) அழிந்தது.

7. ஆசியா மைனரிலுள்ள எடிசசில்
ஆர்ரிமிஸ் ஆலயம்.

கிரேக்க கன்னித் தெய்வத்தின் நினைவாக கி. மு. 6 இல் பளிங்குக்கற்களால் இவ்வாலயம் கட்டப்பட்டது. கி. மு. 4ல் மீண்டும் புனரமைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் ஏற்பட்ட தாக்குதலினால் கி. மு. 3 இல் அழிக்கப்பட்டது. இவ்வாலயத்தின் அழிபாடுகளில் சில இன்றும் லண்டனிலுள்ள பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

## நவீனமானவை

"ரீடேர்ஸ் டைஜஸ்ட்" (Reader's Digest) சஞ்சிகையின் ஆசிரியர் குழுவின் கருத்துப்படி மருத்துவம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் தலைசிறந்த ஏழு சிறப்புகள் உலக அதிசயங்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

1. தொற்றுநோய்களின் கட்டுப்பாடு.

மிகப்பயங்கரமான தொற்று நோய்களுக்கான தடுப்பூசி மருந்துகளும், எதிர்த்தாக்க மருந்துகளும், ஏற்பு ஊசி மருந்துகளும் தயாரிக்கப்பட்டு உபயோகத்துக்கு வந்தமையால் மரணஆபத்தில் இருந்து கோடிக்கணக்கான மனித உயிர்களை காப்பாற்றியமை.

2. மின் சக்தி

வாழ்க்கையின் நாளாந்த வேலைகள் அத்தனையையும் செய்துமுடிக்கப் போதுமான அளவு சக்தியை-மின் சக்தியை சென்ற நூறு ஆண்டுகளுக்கு மேலாக அளித்து வருகின்றது.

3. விண்வெளி ஆய்வுகள்.

சந்திரனைப் பிடிப்பதும், சந்திரனில் நடப்பதும் போன்ற பல கனவுகள் இன்று நனவுகளாகின்றன.

4. தொலைத்தொடர்புகளும்
செய்திப்பரிமாற்றமும்

ஒளி வேகத்தில் பூமியின் எந்த இடத்துக்கும் தொலைத்தொடர்பும் செய்திப் பரிமாற்றமும் செய்யக்கூடியதாக இன்று அமைந்துவிட்டது. கணணியின் மூலமும் செய்திப் பரிமாற்றம் மிக விரைவாகச் செயற்படுத்தப்படுகிறது.

5. உடற்கூற்று மாற்று அறுவை சிகிச்சையும் செயற்கை உறுப்பு மாற்றமும்.

வயது, விபத்து, வியாதி ஆகியவற்றினால் சேத முறும் மனித உடற்கூற்றுக்களை செயற்படுத்துவது, சிறுநீரகம், இருதயம், ஈரல் மற்றும் நரம்பிழைகள் தகுந்த மருத்துவ சிகிச்சை மூலம் மனித ஆயுளை நீடிக்கும் முறை சிறப்பாக இயங்குகிறது. மூளை நரம்பு களை மாற்றீடு செய்வதற்காக ஆய்வுகள் தொடர் கின்றன.

6. நுண்ணிய தொழில் நுட்பவியலும் மாற்றுப் பொருள் உற்பத்தியும்.

செய்திப் பரிமாற்றம் தொலைத்தொடர்பு, மருத் துவம் ஆகிய துறைகளில் சிறந்த தொழில்நுட்பங் களினால் செரமிக்ஸ், பிளாஸ்ரிக் போன்ற பொருட்கள் மூலம் முன்னேற்றமடையச் செய்வதில் பெரும் புதிய சாதனையடைந்திருக்கிறது.

7. கண்பார்வை வைத்தியத்துக்கான தொழில் நுட்பமுறைகள்.

செய்திப் பரிமாற்றம் முதல் கண் சத்திரசிகிச்சை வரை இன்று எல்லாத் தேவைகட்கும் ஒளித்தொகு தியை உபயோகிக்கும் முறை நன்றாக வளர்க்கப்பட்டு விட்டது.

(இந்த விபரங்கள் ''றீடர்ஸ் டைஜஸ்ட்'' என்னும் சஞ்சிகை வெளியிட்ட 'அறிவியல் உண்மைகள்' என்ற நூலில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டவை)

# பழமொழியும் அதன் பொருளும்

## 'களவும் கற்று மற'

இந்தப்பழமொழிக்கு களவைக்கூட கற்று மறக்கும்படி சொல்வதாய் பொருள் கொள்ளப்படு கிறது. இதன் சரியானபொருள் - தீயவை அனைத்தையும் மறக்கவேண்டும் என்பதாகும். 'களவும் அகற்று மற' என்றது களவும் கற்று மற என்று ஆகிவிட்டது.

## சிவபூசையில் கரடி

பூசையின்போது கரடிவருமா? ஒரு காரியம் நடக்கும்போது சிறு இடையூறு வருமாயின் இம் மொழியைப் பயன்படுத்துவர் 'பூசையின்போது நல்ல வாத்தியக் கருவிகளை இசைப்பார்கள்' கரடிகை என்றொரு வாத்தியம் உண்டு. வெறியாட்டம் போன்றவற்றுக்கு பயன்படும் வாத்தியம் இது. சிவபூசை யில் இதை ஒலித்தால் பூசையின் மகத்துவம் கெடும். எனவே, சிவபூசையில் கரடிகை என்பதே சரியான பொருள்.

## ஆயிரம் பேரைக் கொன்றவன் அரைவைத்தியன்

இப்பழமொழிக்கு மருந்து கொடுத்து ஆயிரம்பேரைக் கொன்றவன் அரை வைத்தியன் என்று தவறாகப் பொருள் கொள்கின்றனர் 'நாட்டு வைத்தியர் மூலிகைகளைக் கொண்டு நோயினைத் தீர்க்க செடிகளைக் கொண்டும், அதன் வேர்களைக் கொண்டும் வைத்தியம் செய்கின்றனர். அதனால், ஆயிரம் வேரைக் கொண்டவன் அரை வைத்தியன் இதுதான் பழமொழி ஆக - ஆயிரம் மூலிகைகளை அறிந்தவன் அரைவைத்தியன் ஆகிறான்.

# வடமராட்சி கிழக்கில் வளராத கல்வி நிலை

- திருமலை யோகேந்திரம்

## கலங்கரை விளக்காய் கல்விக்கழக ஆசிரியர்கள்

பொன்னான பொழுது இவ்வாறு சென்றது.

வடமராட்சிக் கிழக்கில் 47 கழக ஆசிரியர்கள்-கல்வியூட்டுகின்றனர்- ''மிகவும் குறைவாக - ஊக்குவிப்புப் பணத்தினைப் பெற்றுப்- பெரிய அளவு சேவையாற்றும் இவர்கள், மதிக்கப்பட வேண்டியவர்கள்.'' இவ்வாறான எண்ணம் இங்குள்ள மக்களிடம் தங்கியுள்ளது.

## கல்விக்கழக ஆசிரியைகளில் சிலரைச் சந்தித்தோம்.

எந்த இடமாக இருந்தாலும், மகிழ்வோடு சேவையைத் தொடர்வதில் விருப்பமுடைய ஆசிரியை — செல்வி - க. குமுதினி - எழுதுமட்டுவாளிலிருந்து நாகர் கோயிலுக்கு வருகின்றார்.

"எங்களின் சேவைக்கு ஏற்றவாறு ஊக்குவிப்புப் பணம் கிடைப்பதற்கு;'கல்வி வளர்ச்சிக் கழக ஆசிரியர் நிதியம்' ஒன்றை ஏற்படுத்துதல் நல்லது. அவ்வாறு நிதியம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு சரிவர நெறிப்படுத்தப் பட்டால், எமது தேவைகள் சிலவாவது நிறைவேற ஊக்குவிப்புப்பணம் கூடுதலாகக் கிடைக்கும்.''

மேற்கூறிய கருத்தைச் செல்வி - ப. புஸ்பவதி செல்வி சி. செல்வகுலேஸ்வரி ஆகியோர் வரவேற்றனர்.

## பாலர் கல்வி நிலையங்கள்

" வடமராட்சிக் கிழக்கில் பாலர்பாடசாலைகள் இருபதுவரை உண்டு .இடம்பெயர்ந்தோர் தங்ககங்களில் சிலவும், ஏனையவை இங்குள்ளோராலும் இயக்கப்படுபவை'' என்றார்; ஏ - டி - அரியரஞ்சன் ஆசிரியர்.

புகைப்படக் கருவியை எடுத்தபடி ஆசிரியர் வே. புவனேந்திரன் எம்மைத் தொடர்ந்தார்.

இடம்பெயர்ந்தோரின் தங்ககத்தில் இருக்கும் மயிலிட்டி சித்திவிநாயகர் பாலர்பாடசாலை ஆசிரியயை செல்வி க.இராசகுமாரியைச் சந்தித்தோம்.

ஏறக்குறைய பத்து ஆண்டுகள் ஊக்கப்பணமின்றிச் சேவை செய்துவந்த தனக்கு இப்போது புனர்வாழ்வுக் கழகம் ஊக்கப்பணம் வழங்குகின்றது என்கிறார்.

''சத்துணவு தொடர்ந்து கொடுக்க முடியாதநிலை. எமக்கும் போதிய அளவு தொடர்ந்து ஊக்கப்பணம் கிடைக்காதநிலை. ஆயினும் குழந்தைகள் கல்வி பெற வேண்டும் என்பதில் பெற்றேரும் நானும் கவனம் செலுத்துகின்றோம்.'' செல்வி - சீவரெத்தினம் அனுபாமா, கூறினார்.

சனசமூக நிலையங்கள், தமிழர்புனர்வாழ்வுக்கழகம் - மக்கள் நலன்பேணும் சங்கங்கள், விடுதலைப்புலிகள் மகளிர் பிரிவு ஆகியவற்றின் ஆதரவுடன் பாடசாலைகள் நடைபெறுகின்றன. குழந்தைகளுக்குரிய கல்வியைக் கொடுப்பதற்கு ஏற்ற தளபாட வசதிகள் இட வசதிகள், கல்வித்துணைக்கருவிகள் ஏதுமற்ற நிலையில் தான் நாங்கள் பணியாற்றுகின்றோம் - என்கிறார் செல்வி இ. மங்கையற்கரசி. இவர் நாகர் கோவிலில் இருக்கின்றார்.

குழந்தைகளுக்கு கல்வியூட்டும் சேவையின் மூலம், இடம் பெயர்ந்த நிலையில் இங்கிருக்கும் எமக்குள்ள மனத்துக்கங்களை மறக்கின்றோம் - மகிழ்கின்றோம். என்கின்றனர் - செல்விகள் கென்றி நித்தியசாந்தினி- க. விசயலட்சுமி ஆகியோர்.

## மக்களின் ஊக்கத்தில் எழுந்திருக்கும் மாடிக்கட்டிடம் மணற்காடு வித்தியாலயம்

நூறாண்டுக்கத்தோலிக்கக் கோவில் - நூற்று அறுபத்தைந்து கடற்றொழிற் குடும்பங்கள், மரநடுகைத் திட்டத்தின் மூலமாகப் பரந்து வளர்ந்து அடர்த்தியாயுள்ள சவுக்குத் தோப்புக்கள். கட்டிடத்தேவைகளுக்கு மூலவளமாக உதவும் மணற்தம்பிகள்.

## மணற்காடு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்

முப்பது மாணவர்களுடன் 1945 ம் ஆண்டு கொட்டிலில் தொடங்கிய இக்கல்வியகம், இன்றைய நிலையில் ஆண்டு பதினொன்றுவரை கல்வி பயிலும் மாணவர்களுடன், அரச உதவி எதுவும் பெறாமல் இவ்விடத்து மக்களின் உதவியைக் கொண்டு ஐந்தரை இலட்சரூபா செலவில் கட்டப்பட்ட மாடிக் கட்டிடத்தோடு வளர்ந்து நிற்கிறது.

திரு - மோசேஸ் யேசுதாசன், இவ் வித்தியாலய அதிபர் அவர்களைக் கண்டபோது - அறிந்தவை இவைகள்.

1881 ல் நாகர்கோவில் அ. மி. த. க. பாடசாலை
1883 ல் ஆழியவளை சி. சி. த. க. பாடசாலை
1890 ல் செம்பியன்பற்று அ. த. றோ. த. க. பாடசாலை
1890 ல் குடத்தனை கரையூர் அ. மி. த. க. பாடசாலை

கட்டப்பட்டன. நூறாண்டு கல்விப் பாரம்பரியம் கொண்ட இக் கல்வியங்கள் இம் மண்ணில் பெயரை மட்டும் தாங்கிக் குறுகியுள்ளன.

மணல்காடு. நாகர்கோவில் ஆகிய ஊர்களில் தரைக்கீழ் நீர்வளம் வேண்டிய அளவு உண்டு என்பதும்—பருத்தித்துறை, சாவகச்சேரி, வல்வெட்டித்துறை ஆகிய ஊர்களுக்கு வழங்கக் கூடிய அளவு நீர்வளம் இங்கிருப்பதை அறிந்து அமெரிக்க நாட்டின் உதவி பெற்று நீர்வழங்கும் திட்டம் முன்பு இங்கு ஆரம்பிக்கப்பட்டதையும் - சுட்டிக்காட்டினார் ஆசிரியர் - வே. புவனேந்திரன் அவர்கள்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

கண்ணாடி செய்வதற்கு ஏற்ற மணற்காட்டு மணலைப் பற்றியும் பெருமையாகப் பேசினார் அவர்.

வியத்தகு வளங்கள் இருந்தும், கல்விவளமற்றுப் போனது பற்றி; வடமராட்சிக் கிழக்கு மக்கள் அதிக மானோர் - தம் வேதனையைத் தெரிவித்தார்கள்.

தம் இடத்திற்குக் கல்வியாளர் எவர் வருகின்ற போதும்- பண்போடும் - அன்போடும் அவரை அணைத்துக் கொள்ளும் வடமராட்சிக் கிழக்கு மக்களின் அன்பும் - விருந் தோம்பலும், இனியபண்பும் எவராலும் மறக்க வியலாதவையாகும்.

வடமராட்சிக் கிழக்கில் உடுத்துறை நாகர்கோவில் கொத்தணி இரண்டுள்ளும் - பதினெட்டுப் பாடசாலைகள் உள்ளது. இப் பாடசாலைகளில் 4285 நிரந்தர மாணவர்களும்; 1200 இடம் பெயர்ந்த மாணவர்களுமாய்; 5485 மாணவர்கள் - கல்வி பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

சிங்கள இராணுவப் பாசறைகளிலிருந்து – வரும் வேட்டுச் சத்தங்களை அறிந்தபடி – பதட்டங்களின் நடுவேயும் - மிக்க கடமையுணர்வோடு - மாணவர்களின் நலனில் விருப்பம் வைத்துப் பணியாற்றும் - உடுத்துறை மகா வித்தியாலய அதிபர் திரு. த - இராசலிங்கம் அவர்களும், அப் பாடசாலையின் ஆசிரியர்களையும்; கல்வியின் பணிகைக்குப் பொறுப்பான அதிகாரிகளின் ஒத்திசைவைப் பெற்று கல்விப் பொதுச் சாதாரணதரம் வரை வகுப்புக்களைவைத்துப் பாடசாலையின்தரத்தை உயர்துவதில் மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திரு - பொ. சங்கரப்பிள்ளை அவர்கள் கவனம் எடுப்பதையும்; மக்கள் கூறினர்.

நாகர்கோவில் கொத்தணிக்குள் இயங்கும் அம்பன் அமெரிக்கமிஷன் தமிழ் வித்தியாலயம் – அதன் அதிபர் ஆசிரியர்களின் நல்லூக்கத்தினால் மாணவர் நலன் கருதிப் போடப்பட்ட கொட்டிலோடு வளர்ந்து காட்சி தருகின்றது.

இதுபோன்று ராசன் நகரில் அமைந்திருக்கும் கல்வியகம் இப்பகுதிப்பாடசாலைகளுக்கு நிகரான கல்வியகமாகத் தோன்றி நிமிர்ந்துள்ளது. இவைகள்; மக்கள் முயற்சியின்மூலம் கல்விக்கூடங்கள் உருவாகலாம் என்பதற்கும், உருவாக்கமுடியும் என்பதற்குமான முன்னுதாரணங்கள். இத்தகு நிலமைகளைக்கண்ட நாம், இன்னும் சில பொழுதைச் செலவு செய்தபோது; வந்த வரவுகளை இங்கு கூறுவது நலமே.


இரத்தம் உயிர் காக்கும்.
உயிர் காக்க சஞ்சீவி

**சஞ்சீவி**

வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.


## மக்கள் சேவையில் - ம - டேவிற் அடிகள்

வடமராட்சிக் கிழக்குப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும், இப்பிதேசத்தின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டவருமான - திரு - சி - பொன்னம்பலம் அவர்களையும்;

வெற்றிலைக் கேணியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து செம்பியன் பற்றிலிருக்கும் ஆசிரியர் திரு. ச. திவியராசா அவர்களையும் நாங்கள் காணச் சென்றபோது - அவர்களினூடாகவும், மற்றும் பல பேரூடாகவும்—

நிலைகுலைந்த, ஏதிலிகள் தங்ககத்தில் வாழ்ந்து கொண்டு கல்வி பயில்வோருக்குச் சீருடை - கல்விக்கான துணைக் கருவிகள் - கொப்பிகள் அன்பளிப்பாகக் கொடுத்து;

தாளையடி பங்குத் தந்தையாக - இப்பகுதிக்கு வந்த நாள் முதல், இங்குள்ள எல்லா மக்களோடும் அன்பு வைத்துப் பழகி - எல்லோருக்குமான நலன் கொடுக்கக் கூடிய பணிகளில் தன்னை முழுமையாக இணைத்துக் கொண்டு; சகோதரராய் - உறவினராய் விளங்கி போக்குவரத்துச் சிரில்லா வருத்தத்தை தீர்ப்பதற்கான வழிகளில் முயன்று நாகர்கோவில் தொட்டு, குடாரப்பு வரையிலான நான்கு மைல் தூரக் கரையோரத்து வழியை முழுமையாக அமைத்துக் கொடுத்திருக்கும் அருட்திரு – ம. டேவிற் அடிகள், மக்கள் சேவையால் உயர்ந்து நிற்கின்றார் என்பதை அறிந்தோம்.

''தள்ளா விளையுளும் - தக்காரும்
தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு'' - குறையாத


விளை பொருளும், நல்ல அறிவுடையோரும் கேடுதராத செல்வம் உடையோரும் கூடி வாழும் நாடு - நன்னாடு. என்பது இக் குறளடியின் பொருளாகும்.

வலிகண்டியிலிருந்து - சுண்டிக்குளத் தொடுவாய் வரையில் உள்ள கரை யோரங்களிலாவது;

பனைகள் வளர்க்கலாம் - எண்ணற்றபயனுண்டாகும். விரித்த மணற்பரப்பில் 4500 ஏக்கர் நிலத்தில் - 360000 தென்னை நடப்படுமானால் யாழ் குடாநாட்டின் தெங்குத் தேவை நிறைவு பெறும்.

மணற்காடு ஊரில் இருபத்தைந்து ஏக்கருக்கும் மேலான நிலத்தில் 36300 சவுக்கு மரக்கன்றுகளை தமிழீழப் பொருண்மிய கழகம் இவ்வேளை வைத்திருக்கின்றது. இத்திட்டம் மென் மேலும் ஆண்டு தோறும் வளருமாயின், எதிர்காலத்தில் எம்மை அச்சுறுத்தும் எரிபொருள்தேவை நிறையும் – ஐந்து ஆண்டு போனபின் - ஒரு மரத்திலிருந்து நூறுகிலோ நிறை விறகும் கிட்டும். மரத்தின் கீழே அடையும் பசளை மண்மீது முளைக்கும் பசிய புல் ஆடுகளுக்கு உணவாகும்.

# இளையராஜாவின் 'சிம்பனி' சாதனை



திரு. எம். எஸ் விஸ்வநாதனின் அணைப்பில் இளையராஜா

'இசைஞானி' 'இராகதேவன்' போன்ற பட்டங்களுடன் அழைக்கப்படுகின்ற இசையமைப்பாளர் இளையராஜா இந்தப் பட்டங்களுக்குத் தகுதி வாய்ந்தவர் என்பதை நிரூபித்துள்ளார்.

உலகின் மிகப்பெரிய இசை மேதைகளான பாக், மொசாட், பீதோவன், பிராம்ஸ் போன்றோரின் இசைக் கோர்வைகளின் வரிசையில் இளையராஜா அவர்களின் படைப்பும் இடம் பெறப் போகின்றது.

இவர் உருவாக்கியுள்ள 'சிம்பனி' இசை வடிவத்தினை ஒலிப்பதிவு செய்வதற்காகலண்டன் அழைக்கப்பட்டுள்ளார்.

இளையராஜா அவர்களின் 'சிம்பனி'யை வாசிக்கவிருக்கும் பிரிட்டிஸ் அரசியை பேணுநராகக் கொண்டுள்ள 'றோயல் லண்டன் பிலார்மோனிக்' என்ற இசைக்குழுவினர் இப்போதுதான் முதன் முறையாக ஒரு ஆசிய இசையமைப்பாளரின் இசை வடிவத்தை வாசிக்கப் போகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சிம்பனி (symphony) இசை என்பது நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு விதமான மேற்கத்திய இசைக் கருவிகளைக் கொண்டு இசைக்கலைஞர்கள் இசைக்கும் இசைக் கோலமாகும். இசைக்கலைஞனின் முழுக்கற்பனைக்குமான இசைவடிவம் இது. இதில் பாடல்வரிகள் எதுவும் இருக்காது. உலக இசைமேதையான பராம்ஸ் அவர்களுக்கு ஒரு 'சிம்பனி' இசைவடிவத்தைப்படைக்க 14 ஆண்டுகாலம் தேவைப்பட்டதாம். இளையராஜா அவர்கள் ஒரு யாதத்தில் இவ்விசை வடிவத்தை உருவாக்கி பல இசைமேதைகளை பிரமிப்பில் ஆழ்த்தியுள்ளார்.

''உலகின் தலைசிறந்த இசை வித்தகர்களின் வரிசையில் எனக்குப் பெருமையளித்து 'மாஸ்ரர்' என்று இசைவல்லுனர்கள்நிறைந்த 'றோயல் லண்டன் பிலார் மோனிக் இசைக்குழு' என்னை அழைக்கிறது என்றால் அது எனக்குக்கிடைத்த பெருமை அல்ல; ஒவ்வொரு தமிழனுக்கும் கிடைத்தபெருமை'' இப்படிக்கூறுகிறார் 'இசைஞானி' இளையராஜா

தமிழ் நாட்டிலுள்ள பண்ணைபுரம் என்னும் கிராமத்தில் பிறந்து வளர்ந்த, பிச்சைமுத்து என்ற இயற்பெயரைக் கொண்ட இளையராஜா அவர்கள் 'அன்னக்கிளி' என்ற தமிழ் திரைப்படத்தின் மூலம் மக்களுக்கு அறிமுகமானவர். 'சிம்பனி' இசையை முதன் முதலில் படைத்த ஆசிய நாட்டவர் என்பதைவிட 'தமிழன்' என்பது நாம் பெருமைப்படவேண்டிய விடயமாகும். □

## வடமராட்சிக் கிழக்கில்...

4 ஆம் பக்கத் தொடர்ச்சி ..

இங்குள்ள தரவை நிலத்தில் கண்டல் - கண்ணா - ஆகியமரங்கள் விழுது விட்டு வளரும். சதுப்பு நிலத்தினூடே இறால் நண்டு ஆகிய உயிரினங்களும், பறவைகளும் வாழும்.

நீர்நிலைகளை அண்டிவளரும் பன்னி - சாய்பை முதலியன - பாய் இழைக்கப் பயன்படுவனவாகும்

சுற்றியுள்ள கடல் வெளியில் மீனும் - நீரைப் பற்றியுள்ள நிலமெங்கும் பயிரும் உருவானால் - குறையாது பொருள்விளையும் - இத்தனைக்கும் தேவையான நீர்வளம் - நிலவளம் - மனிதவளம் இருப்பது போன்று; வளராத நிலையில் இந்நிலக் கல்வியிருப்பது நோக்கத்தக்கது.

கல்வியாளர்களின் துணையையும் - ஆதரவையும் பெற்று மக்களின் ஊக்குவிப்புடன் - பாடசாலை ஆசிரியர்களிடையேயுள்ள இணக்கம் - பொறுமை - இவற்றோடு - பாடசாலையைப் பெருத்தவரை மாணவர்கள் பெறும் வரவின் - ஒட்டுமொத்த விளைவுதான் - கல்வி வளர்ச்சி என்பது. தனியொருவரால் இது விளைவது அல்ல - மேலும்;

தம்மிடம் கல்வி பெறும் மாணவர்பால் ஈடுபாடும் அன்பும் கொண்டு, அவர்களது கல்வித்தேவையை, நடைமுறைக்குப் பொருத்தமான வகையில் ஆசிரியரானவர் கல்வியை நிறைவுசெய்ய முயலுதலும்;

இப்பகுதி ஊர்களிலுள்ள கல்வியாளர்களின் சக்தியை - இவ்விடத்து வளர்ச்சிக்காக முழுமையாகப் பயன்படுத்திடுதலும் -

மக்கள் நலன் பேணுவோர்கள் - பாடசாலை ஆசிரியர்கள் - அதிபர்கள் ஆகியோருடன் இருகொத்தணியின் மூத்தோர்களும்; முழுமையாக இசைந்து பொதுவான இடங்களில்கூடிக் கல்விவளர்ச்சிபற்றி உசாவிக் கலந்துரையாடி; மாணவர்களின் கல்வி நலனைச் சிந்திப்பதும் ஆசிரியரிடத்து - அதிபர்களிடத்தும் - மிக்க தேவையானதாகும். இத்தேவை ஆகியவற்றில் இக் கொத்தணி அதிபர்கள். முழுமையான வெற்றியைப் பெறவில்லை என்பது இங்கு மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் வளம்மிக்க ஊர்கள் உடைய வடமராட்சிக் கிழக்குப் பகுதி துக்காரும் தழ்விலாச் செவ்வரும் சேரும் ஊராக மாறுவதற்கு நீண்டநாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றது.

மாண்புமிக்க இம் மக்களைக் கண்டோம், கருத்துக் கேட்டறிந்தோம் - அவர்களிடமிருந்து விடைபெற்றபோது - எம்மவர் கண்கள் கலங்கிப் போயிற்று

சுழிபுரத்தில்

உங்கள் சேவைக்கு

தேவி கிறைண்டிங் மில்

அரிசி குற்றல், திட்டல்,

உடைத்தல், மாவு அரைத்தல்,

தூள் அரைத்தல், பயறு, உழுந்து திரித்தல்.

சுத்தமாகவும், தரமாகவும்

உங்களின் வேலைகளை

குறித்த நேரத்தில் செய்து தருபவர்கள்

V

# தேவி கிறைண்டிங் மில்

பிரதான வீதி, சுழிபுரம்.

# கார்பன் பரிசோதனை

"வாத்தியார் ஐயா விட்டை இண்டைக்கு ஒருசந்தேகம் கேக்க வேணுமெண்டு நினைச்சுக் கொண்டு வந்தனான்."

"புதினமான கதை சொல்லுறீர் சண்முகராசா, சந்தேகங்களைத் தெளிவு படுத்திறதுக்கும், தெரியாத விசயங்களைத் தெரிஞ்சு கொள்ளுறதுக்கும் தானே நாங்கள் அடிக்கடி இந்த விறாந்தையிலே கூடுறம். சரி, இப்ப உம்முடைய சந்தேகத்தைச் சொல்லும் பாப்பம்."

"இண்டைக்கு என்ரை சங்கக்கடைக்குச் சாமான் வாங்க வந்த இரண்டு பேர் தங்களுக்குள்ளை கொஞ்ச நேரம் கதைச்சுக் கொண்டு நிண்டினம், அவை படிச்சவை. நானும் அவையின்ரை கதைக்குச் சாடையாகக் காது குடுத்தன், எங்கையோ நடந்த புதைபெருள் ஆராய்ச்சியிலை ஒரு இராட்சத மிருகத்தின்ரை எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டதாம். அதைக்கொண்டு அந்த மிருகம் கி.மு. 5800 ம் ஆண்டு செத்ததெண்டு சொல்லியிருக்கினமாம். எலும்புக் கூட்டிலையிருந்து செத்த காலத்தை எப்பிடிக் கண்டு பிடிக்கிறது?"

"அதைக் கண்டுபிடிக்கிறதுக்கு ஒரு பரிசோதனை இருக்குது சண்முகராசா."

"கார்பன் பரிசோதனை."

"கமலநாதன் சொல்லுறது சரி, பல்கலைக் கழகத்திலை படிக்கிறவரெல்லே, அறிஞ்சிருப்பார். கார்பன் பரிசோதனை எப்பிடியானது எண்டு கமலநாதனுக்குத் தெரியுமோ?"

"தெரியாது"

"இது ஒரு நுணுக்கமான பரிசோதனை. 'றேடியோ கார்பன் காலம் அளத்தல்' எண்டும் இதைச் சொல்லுவினம். கார்பன் எண்ட மூலப்பொருள் தான் இந்தப் பரிசோதனைக்கு அடிப்படையானது. சகல உயிரினங்களிலையும் கார்பன் இருக்குது."

"மனிசரிலையும் இருக்குதோ வாத்தியார்?"

"ஓம். மனிசரிலையும் இருக்குது. வான்வெளியிலை இருக்கிற கரியமில வாயுவிலையிருந்து ஒளிக்கலவை மூலமாகச் செடிகொடிகளிலை கார்பன் வந்து சேருது. அந்தச் செடிகொடிகளைச் சாப்பிடுகிற உயிரினங்களிலையும், அந்த உயிரினங்களைச் சாப்பிடுகிற உயிரினங்களிலையும் இந்தக் கார்பன் சேர்ந்து கொள்ளுது. இரண்டு வகையான கார்பன் இப்பிடிச் சேர்ந்து கொள்ளுது."

"அந்த இரண்டு வகையும் என்ன?"

"அவசரப்படாதையுங்கோ நல்லலிங்க மாஸ்ரர், சொல்லத்தானே போறன். ஒண்டு கார்பன் 12. மற்றது கார்பன் 14. கார்பன் எண்ட இந்த மூலப்பொருளின்ரை அணுவின் மையத்திலை ஆறு புரோத்தன்களும் ஆறு நியூத்தரன்களும் இருக்கிறது கார்பன் 12. ஆறு புரோத்தன்களும் எட்டு நியூத்தரன்களும் இருக்கிறது கார்பன் 14. கார்பன் 12 மாற்றமடையாதது. கார்பன் 14 மாற்றமடைஞ்சு நைதரசனாக மாறக் கூடியது. ஒரு மனிதனோ பிராணியோ இறந்த பிறகு கார்பன் 12 மாற்றமடையாமல் இருந்த அளவிலேயே இருக்கும். கார்பன் 14 கொஞ்சம் கொஞ்சமாக நைதரசனாக மாறும். அதாவது அளவு குறையும். இறந்த உயிரினத்தின்ரை எலும்பைப் பரிசோதிச்சு எவ்வளவு கார்பன் 14 குறைஞ்சிருக்குது எண்டு அறியலாம். அதைக்கொண்டு இறந்த காலத்தை நிர்ணயிக்கலாம்."

"அதுக்கு ஒரு வாய்ப்பாடு இருக்குதோ வாத்தியார்?"

"வாய்ப்பாடு ஒண்டுமில்லை. கணக்குப் பாத்து அறிய வேணும். ஒரு குறிப்பிட்ட அளவு கார்பன் 14 அது இருந்ததிலும் பார்க்க அரைவாசியாகக் குறையிறதுக்கு 5568 வருஷங்கள் எடுக்கும். ஒவ்வொரு அளவும் அதன் அரைவாசியாகக் குறையிறதுக்கு 5568 வருஷம் பிடிக்கும். அதாவது பன்னிரண்டு ஆறு ஆகிறதுக்கு 5568 வருஷம். பிறகு ஆறு மூண்டு ஆகிறதுக்கு 5568 வருஷம். இப்பிடியாக, மிஞ்சியிருக்கிற கார்பன் 14 எவ்வளவு எண்டதைக் கொண்டு குறைஞ்சது எவ்வளவு எண்டு அறியலாம். அதைக் கொண்டு எவ்வளவு காலத்துக்கு முதல் செத்தது எண்டு நிர்ணயிக்கலாம்."

"செத்த பிறகும் கார்பன் 14 வந்து சேர்ந்திருந்தால் என்ன செய்யிறது?"

"செத்த பிறகு கார்பன் 14 புதிசாக வந்த சேருறதில்லை கனகேந்திரம்."

"உயிர் பிரியிற நேரத்திலை எவ்வளவு கார்பன் 14 இருந்ததெண்டு எப்பிடி அறியிறது?"

"கார்பன் 12 மாற்றமடையாதது எண்டு முன்னமே சொல்லியிருக்கிறன். செத்த பிறகும் ஒரே அளவாகவே தொடர்ந்து இருக்கும். கார்பன் 12, கார்பன் 14 ஆகிய இரண்டும் எல்லா உயினங்களிலையும் ஒரே விகிதாசாரத்திலேயே இருக்கும். உயிரினங்கள் சாகும்வரை இந்த விகிதாசாரம் மாற்றமடையாது. கார்பன் 12 எவ்வளவு இருக்குதெண்டு அறிஞ்சுகொண்டால் உயிர் பிரியிற நேரத்திலை கார்பன் 14 எவ்வளவு இருந்ததெண்டு அறியலாம்."

"வலு சிக்கலான விசயம் தான்."

"அதுதானே சண்முகராசா முதலிலையே சொன்னனான் இது ஒருநுணுக்கமான பரிசோதனை எண்டு."

— ஞானகுரு


**வாத்தியார் வீட்டு விறாந்தை**



கி. செல்மர் எமில்
ஊர்காவற்றுறை.

● ஆண்களுக்கு தலையில் வழுக்கை விழுவதுபோல், பெண்களுக்கு வழுக்கை விழுவதில்லையே. இதற்கான காரணம் என்ன?

ஆண்களில் பொதுவாக வழுக்கை ஏற்படுவது பரம்பரைக் காரணிகளினாலேயே. ஆனால் சிலவேளைகளில் தோல்நோய்கள், ஒட்டுண்ணிகள், பூச்சிகள், பங்கசுக்கள் போன்றவற்றாலும் வழுக்கை ஏற்படலாம். ஆண்களில் காணப்படும் பாலியல் ஓமோனான அன்ட்ரொஜன் என்பது பெண்களில் காணப்படுவதில்லை.



அத்துடன்வழுக்கை விழுவதற்குக் காரணமான பரம்பரை அலகுகள் (Genes) ஆண்களின் நிறமூர்த்தமான "Y - குறோமோசோம்" களிலேயேஉள்ளது. இவை இரண்டும் பெண்களில் காணப்படுவதில்லை. இதனாலேயே அவர்களுக்கு வழுக்கை ஏற்படுவதில்லை. மேலே குறிப்பிட்டது போன்று தோல் நோய்கள் மற்றும் நுண்ணங்கிகளின் தாக்கம் காரணமாக பெண்களிலும் வழுக்கை ஏற்படலாம். மனிதரில் 23 சோடி நிறமூர்த்தங்கள் காணப்படுகின்றன. இவற்றில் 22 சோடி ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரேமாதிரியானவை. 23வது சோடி நிறமூர்த்தம்மட்டும் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபடுகின்றது. ஆணின் கலங்களில் உள்ள 23வதுசோடி நிறமூர்த்தம் XY குறோமோசோம்களையும், பெண்களில் XX குறோமோசோம்களையும் கொண்டிருக்கும்.

ஆண்களிலும் கூட எல்லோருக்கும் வழுக்கை ஏற்படுவதில்லை.

த. நேசன்
சுதுமலை.

● உடலில், 'காய்ச்சல்' இருக்கும்போது சிறுநீர் மஞ்சள் நிறமாக வெளியேறுகின்றதே. இதன் காரணத்தை விளக்குவீர்களா?

சிறுநீர் சாதாரண சுகதேகியில், மெல்லிய வைக்கோல் நிறமாகக் காணப்படும். சிறுநீரின் நிறத்திற்கு 'யூரோக்குரோம்' என்ற நிறப்பொருளே காரணம். மனித உடலில் ஏற்படும் அசாதாரண நிலை அல்லது சுகயீனம் ஏற்படும் காலங்களில், இதன் நிறத்திலும் மாற்றம் ஏற்படும். ஈரலின் பித்தம் சிறுநீரில் கலந்தால், பச்சை கலந்த செம்மஞ்சள் நிறமாக இருக்கும். செந்நிறமாக இருந்தால், செங்குருதித் துணிக்கைகள் சிறுநீருடன் வடிகட்டப்பட்டுள்ளதைக் காட்டும். இதுவே சிறுநீரக அழறசி அல்லது நெபிறைற்றிஸ்நோய் எனப்படும். சிலவேளைகளில் பல நிற மாத்திரைகளை உட்கொள்ளும்பொழுது சிறுநீரின் நிறமும் அவற்றிற்கேற்ப மாறும். விற்றமின் 'பீ' குளிசை தொடர்ந்து உட்கொண்டால் கடும் மஞ்சள் நிறமாக இருக்கும். நிறமற்று தண்ணீர் போன்று காணப்பட்டால் அது பொலியூரியா என்பதன் விளைவாக நீர்த்தன்மை அடைவதன் காரணமாக ஏற்படும். எனவே சாதாரண சுகதேகியில் சிறுநீரின் தன்னீர்ப்பு 1.015 — 1.025 க்கு இடையில் இருப்பின் சாதாரண நிறமாக இருக்கும். காய்ச்சல் நேரங்களில் சிறுநீரின் அளவு குறைந்து, அதன் தன்னீர்ப்பு உயர்வதால் அதிக மஞ்சளாகத் தெரிகிறது.

செல்வி: கலாஞ்சினி சுதிரேசு
யாழ். செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை,
தாளையடி.

● ஏனைய சிலநாடுகளில் நில நடுக்கம் ஏற்படுவதைப் போன்று இலங்கையில் அவ்வாறு ஏற்படாததன் காரணம் என்ன?

புவியோட்டில் ஏற்படுகின்ற அதிர்ச்சியே புவிநடுக்கம் என்கின்றோம். புவியோட்டை ஆறு தகடுகளாகப் புவியியலாளர்கள் வகைப்படுத்தியிருக்கின்றனர். அவை, அமெரிக்கத் தகடு, ஆபிரிக்கத்தகடு, இந்திய அல்லது அவுஸ்ரேலியத் தகடு, ஐரோ-ஆசிய தகடு, பசுபிக்தகடு, அந்தாட்டிக்தகடு என்பனவே. இவற்றுள் இந்திய அல்லது அவுஸ்ரேலிய தகட்டு ஒட்டுப்பகுதியில் இலங்கை இருப்பதால், புவிநடுக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கின்றன. மற்றைய தகட்டு ஒட்டுப்பகுதிப் பிரதேசங்கள் குறிப்பாக யப்பான், பிலிப்பைன்ஸ், இத்தாலி, நிக்கரகுவா ஆகியவற்றின் பாறை அமைப்புக்கள் நில நடுக்கம் ஏற்படுவதற்கான பிரதேசங்களாகும். இவ்விடங்களில் உள்ள பாறைகளின் அமைப்பும், எரிமலைகளும் பூமி அதிர்ச்சிக்குக் காரணமாகும். எனவே இலங்கை அதிர்ஷ்டவசமாக இந்திய - அவுஸ்ரேலிய தகட்டு ஒட்டுப் பகுதியில் இருப்பதால் நிலநடுக்கம் ஏற்படாது.

செல்வி அ. காஞ்சனா
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

● பண்டைய எகிப்திய அரசர்களின் இறந்த உடல்கள் இன்றும் பாதுகாக்கப்படுகின்றனவாமே?

ஆம்!... இவை "மம்மிகள்" என அழைக்கப்படுகின்றன. அன்புள்ள காஞ்சனா! இன்றைய நவீன சொல்லான "மம்மி!" அல்ல. பண்டைக்கால எகிப்திய மன்னர்களின் இறந்த உடலைப் பதப்படுத்தி பேழையில் பாதுகாக்கப்பட்டு இன்றும் அப்படியே உயிருடன் பார்ப்பதுபோல் இருக்கும். இவ்வாறு பதப்படுத்தப்பட்ட உடல்களே 'மம்மிகள்' என அழைக்கப்படுகின்

றன. இரண்டாயிரம் வருடங்கள் கழித்தும் பழுதடையாது இருக்கும் இத்த மம்மிகள் இன்று எகித்திய நூதன சாலைகளில் வைக்கப்பட்டுள்ளன.

இன்று இத்தகைய இறந்த உடல்களைப் பாதுகாப்பதற்கு 'போமலின்' (போமல் டிகைட்) என்னும் திரவம்பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் 2000 வருடங்களுக்கு முன் இயற்கைத் திரவங்களைக்கொண்டு பதப்படுத்தப்பட்டுள்ளன என்றால்பண்டைய அறிவியல் அறிவு எந்தளவுக்கு இருந்திருக்கின்றது என்று பாருங்களேன்.

கா. காந்தகரன்
வத்தராயன் வடக்கு, தாளையடி.

- சில காலங்களில் கடலில் இருந்து ஒதுங்குகின்ற பலபொருட்களில் ''ஆம்பல்'' என்னும் விலைமதிப்புடைய பொருளும் ஒதுங்குகின்றதே. இது எங்கிருந்து, எப்படி உருவாகின்றது?

அன்புள்ள காந்தகரன் இவை கூடுதலாக உங்களுடைய பகுதியில் ஒதுங்கியிருக்கின்றன. தாளையடி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு போன்ற இடங்களில் பலருக்கு இந்த அதிஷ்டம் அடித்திருக்கின்றது. நீங்கள் 'ஆம்பல்' என்று கூறியது 'அம்பர்' என்பது சரியான சொல். இது இருவகையானவை.

1. அம்பர் (Amber) - கோடிக் கணக்கான ஆண்டுகள் முன் உயிருள்ள மரங்களில் இருந்து வடிந்த பிசின்கள் நிலத்துள் கிடந்து, மஞ்சள் பழுப்பு நிறமாக மாறுகின்றன. இவையே அம்பர் எனப்படுகின்றன. இவை பால்டிக் கடற்பகுதிகளில் கிடைக்கின்றன இவை தூள்களாக்கப்பட்டு, மெருகூட்டும் எண்ணெய், சாயவகைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

2. அம்பர் (Ambergris) :- இது ஒர்கோலை, 'மீனம்பர்' எனவும் அழைக்கப்படும். இவ்வகை அம்பர்கள் ஸ்பேம் திமிங்கிலத்தின் குடலில் இருந்து வரும் மெழுகுபோன்ற பொருள். இது சில வேளைகளில் கழிவுப்பொருளாகத் திமிங்கலத்தின் வயிற்றினின்று வந்து நீரில் மிதந்து கொண்டிருக்கும். இது வாசனைப்பொருட்கள் செய்யப் பயன்படும். இதுவே நீங்கள் குறிப்பிட்ட அம்பர்

அன்புக்கினிய வாசகர்களே!

'அறிவுலகம்' பகுதிக்கு நீங்கள் அளிக்கும் ஆதரவுக்கு நன்றி! பெருமளவில் வினாக்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை ஒரேதடவையில் பிரசுரிக்க முடியாமைக்கு எமது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தொடர்ந்து வெளிவரும் இதழ்களில் உங்கள் வினாக்களுக்கான விடைகள் இடம்பெறும்.

கடிதங்களை அனுப்பும்பொழுது தெளிவாக முழுமையாக உங்கள் முகவரிகளை எழுதவும். 'சாளரம்' இதழைத் தொடர்ந்து படியுங்கள்! வருட முடிவில் இடம்பெறும் 'பொது அறிவுப் போட்டி'யில் பங்குகொள்ளுங்கள். பரிசினை வென்றெடுங்கள்! கடிதங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

'அறிவுலகம்',
சாளரம்,
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

# பயன்தரு குறிப்புகள்

- அணுவினால் ஆக்கமும், அழிவும் ஏற்படுகின்றன. அணுசக்தியைப் பெறுவதற்கு யுரேனியம், தோரியம் ஆகிய மூலகங்கள் பயன்படுகின்றன. அணுவில் இருந்து அழிவுக்கு வித்திடும் அணுகுண்டுகள் தயாரிக்கப்படுகின்றன. உலகின் முதலாவது அணுகுண்டு 1945ம் ஆண்டு யூலை மாதம் 16ம் திகதி நியு மெக்சிக்கோ பாலைவனத்தில் வெடிக்கப்பட்டது.

- சுயிங்கம் என்னும் மெல்லும் பிசின் சப்போட்டா என்னும் சீமை இலுப்பை மரப்பாலில் இருந்து செய்யப்படுகிறது.

- உலகின் முதல் செயற்கை இதயம் பொருத்தப்பட்டவர் 61 வயது நிரம்பிய பி. கிளாக் என்பவர். இது 1982 ல் 7.5 மணித்தியாலங்கள் இடம்பெற்றது.

- கம்போடியாவில் உள்ள அழிந்து கிடக்கும் பழைய நகரம் 'அங்கோர்' என்பது, இங்கு இந்துக் கோயில்களின் இடிபாடுகள் காணப்படுகின்றன.

- இரும்பு நுரையீரல் (IRON-LUNG) என்பது 1928ல் அமெரிக்க மருத்துவரான ட்றிங்கர் (DRINKER) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. தொண்டைக்கரப்பன், இளம்பிள்ளைவாதம், போன்ற சில நோய்களில் சுவாசத் தசைகள் தமது சக்தியை இழந்து விடுகின்றன, அதனால் சுவாசப்பைகளின் தொழிற்பாடு நின்று போய் நோயாளி இறக்கக் கூடும். அப்பொழுது செயற்கைமுறையில் சுவாசத்தை ஏற்படுத்துவதற்காகவே 'இரும்பு நுரையீரல்' என்ற இக்கருவி கண்டுபிடிக்கப்பட்டது.

- இரேடர் (RADAR) என்பது போர்க் காலங்களில் எதிரியின் விமானங்களையும், கப்பல்களையும், இலகுவில் கண்டுபிடிப்பதற்கும், எதிரியின் தளங்களின் மீது குண்டு வீசுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இது வானொலி அலைகளைக் கண்ணுக்குத் தெரியாத தொலைவில் உள்ள பொருட்கள்மீது செலுத்த அவ்வலைகள் அப்பொருட்கள் மீது பட்டுத்தெறிப்படைவதால் அப்பொருட்களைக் காட்டக்கூடிய கருவி. இன்று 'இரேடர்' கருவி கப்பல்களிலும், விமானங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் இதன் உதவியினால் பல புதிய தகவல்களை அறிந்து கொள்கின்றனர்.
Ra = Radio; D = detection; A = and,
R = ranging என்பதன் சுருக்கம் RADAR ஆகும்.

- பிக்பென் (BIG-BEN) என்பது பிரித்தானியா பாராளுமன்றக் கட்டிடத்தின் மீதுள்ள புகழ்பெற்ற நேரம் காட்டும் மணிக்கூடு.

தொகுப்பு: ஆனந்தி.

# சிங்களவரை குடியமர்த்தி சேனநாயக்கா உலா வந்தார்

● திருமலை யோகேந்திரம்

5-6-1956 முதல் 12-6-1956 வரையிலான நாளிடைவேளையில் தமிழர் வாழ்நிலைகளைத் தளர்த்தி அவர்களைப் புலம் பெயர்த்திட்ட சிங்கள வன்முறையாளர்களும் - காவல்துறையினரும் - துறை நீலாவணை மக்களின் வீரச் செயல் கேட்டுக் கிலி கொண்டாரர்கள்.

கல்லோயா- பொலநறுவை ஆகிய தமிழிடங்களின் மையத்தேயும், அருகேயும் குடியமரும் சிங்களக் குடியமர்வுகளைக்கண்டும், கேட்டும் நெடுநாளாகக் கவலையில் மூழ்கியிருந்த தமிழர் பலரும் இச்செய்தியாற் களிப்புற்றார்.

பன்னெடுங்காலத் தமிழர் வாழ்வியல் நிலத்திலே சிங்களக்குடிகளின் நிழல் படிந்தது.

இந்நாட்டிலிருந்தும், வெளிநாட்டவரிடத்தும் பெற்றுக்கொண்ட பணத்தில் இருபத்தைந்து வீதமான வற்றை கல்லோயாக் குடியமர்த்தலுக்குச் செலவிட்ட அரசு; முதலில் முந்நூறு குடும்பங்களெனத் தொடங்கி தொடர்ந்த பத்தாண்டினுள் இருபத்தையாயிரம் குடும்பங்களைக் குடியமர்த்துவதை தன் இலக்கெனக் கொண்டால்;

கல்லோயா, இக்கினியாகலை, சடையன் தளாவை, சவளக்கடை ஆகிய இடத்து நிலங்களூடே; தமிழ் முஸ்லீம் மக்கள் வழிவழியாகச் செய்துவந்த வயல் நிலங்களையும் அள்ளிச் சேர்த்து ஆனி மாதம் 1950 ம் ஆண்டிற்குள்ளாக- இரண்டாயிரத்துஐநூறு ஏக்கருக்கும் அதிகமான நிலத்தைச் செப்பனிட்டுச் சிங்களர்க்கு அரசினர் அளித்திட்டார்.

சிங்களமக்கள் வாழுமிடமான மொனறாகலையிலிருந்து (மயில்மலை)- சியாம்பலாண்டுவ எனுமிடத்தினூடாகப் பொத்துவிலுக்குப் பாதையை டி. எஸ். சேனநாயக்கா 1950 ம் ஆண்டு ஆவணி இருபத்திரண்டாம் நாளில் திறந்துவைத்திட்டதின் பின்னர்; பாணமை எனும் கடற்புறத்துத் தமிழ் ஊர் சிங்களரால் நிரம்பிற்று.

இவ்வாறு கடற்புறத்தேயுள்ள தமிழ் நிலங்களில் சிங்களரைக் குடியமர்த்திட்ட அரசினர்; மறுபுறத்தில் நெற்பயிர் செய் நிலங்களைத் தம்மவர் வயமாக்குவதில் முனைப்பாயினர்.

பொலநறுவைக்கு அண்மித்த மன்னம்பிட்டிக் கருகமைந்த கங்குலுவில்லுக் குளத்தை அகலப் படுத்தி நூற்றுக்கணக்கான சிங்களக் குடும்பங்களை சிங்கள அமைச்சர் சி. பி. டி. சில்வா குடியேற்றினார்.

இதுமட்டுமன்றி;

## பதவிக்கு வரும் அரசும் பாழ்படும் விளை நிலமும்

கல்லோயாத் திட்டத்தை விரிவாக்குவதற் பொருட்டு 1952ம் ஆண்டில் திரு. கே. கனகசுந்தரம் தலைமையோடு இராணி வழக்குரைஞர் என். டீ. வீரசூரியா, ஏ. ஜே. அமரதுங்கா என்போர் கொண்ட கல்லோயா அபிவிருத்திச் சபையை; அரசு ஏற்ப்படுத்திய போதிலே - கல்லோயா அபிவிருத்திச் சபையின் செயல் எல்லைக்குள் இருப்பவர்கள் என்று காரணம் கற்பித்து; 1952ம் ஆண்டு ஆடித்திங்கள் பதின்மூன்றாம் நாளில் நூறு தமிழ் குடும்பங்களை வாழிடம் விட்டு இச்சபை வெளியேற்றியது.

வழிவழி விளைந்து வந்த தமது வயல் நிலங்களில் சிங்களவர் விதை விதைத்துப் பயன்பெறுதல் கண்டு துயர்பட்ட தமிழர் மனத்தை—கல்லோயா அபிவிருத்திச் சபையினரின் இச் செயல்கள் தீயெனச் சுட்டது -

1952 வைகாசி இருபத்து இரண்டாம் நாளில் தமிழர் வீடுகள் பலவும்—சிங்களவர் வீடுகள் சிலவும் கல்லோயாவில் எரியுண்டன. இதனால் தமிழர் வாழிடமான நற்பிட்டி முனைவரை காவல்துறையினரின் உதவியோடு வந்த சிங்கள வன்முறையாளர்கள் தமிழர்களின் அங்காடிகளை எரித்ததால்; தமிழ் மக்கள் பலர் ஏதிலிகளாய் கோயில்களில்—சில நாளைக் கழித்தனர்.

இதன் பின்னர்—

1952 - எட்டாம் மாதம்— இருபத்தி இரண்டாம் நாளில் காவல்துறை மேலாளர் சிலரும்—சிறிலங்கா அரசின் முதலமைச்சரின் செயலாளரும் கூடிய மகாநாட்டில் சிங்களவர்கள் தவறு செய்திட்டார்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு; எதிர்காலத்தில் இத்தகு தீச் செயல்கள் இடம் பெறமாட்டாது என்ற உறுதிமொழி காவல்துறை மேலாளர்களாற் கொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இவ்வாண்டிலேயே; ஓர் ஒட்டுத் தொழிலகத்தை கல்லேயா அபிவிருத்திச்சபை சிங்களவர்களுக்கென ஏற்படுத்திற்று.

இவ்வாறான செயல்களுடன் மிக்க விரைவோடு 1953 ம் ஆண்டு ஆடிமாதத்திற்குள்ளாகப் பதினாறு சிங்களப் பள்ளிக் கூடங்களையும், முறையே கடுகண்ணாவை (347)—கம்பளை(210)—வட்டகொடை (422) உலப்பனை(234)—கண்டி(1357)—பொல்காவல, கேகாலை(2455) —நாவலப்பிட்டி (80) —வத்தேகம (217) சிலாபம் (29) —நத்தாண்டியா (14) — மருதான (55) வியாங்கொடை (139) - மொரட்டுவா (41) —போனவத்தை (21) —கொச்சிக்கடை (24) — கம்பகா (165)— ஆகிய சிங்கள ஊர்களிலும், வேறுள சிங்கள ஊர்களிடத்தும் எடுத்திட்ட ஆறாயிரத்துப் பன்னிரண்டு சிங்களக் குடும்பங்களைக் கடுகி விரைந்து குடியமர்த்தியது சிறிலங்கா அரசு.

இவ்விதமாகத் தம் அரசு குடியமர்த்திட்ட மக்களைக் காணுதற்காக; பெரும் பொருட் செலவில்

(13 பக்கம் பார்க்க)

# ஔவை சொன்னதுசரியா?

வே. மாலதி,
வட்டுக்கோட்டை.

கே: மார்ச் 21ந் திகதியை இனவாதத்தையும் இனப் பாகுபாட்டையும் ஒழிப்பதற்கான சர்வதேச தினமாகக் கொண்டாடுவது ஏன்?

ப: தென்னாபிரிக்காவின் இனவாத அடக்கு முறைச் சட்டங்களுக்கு எதிராக 1960 ம் ஆண்டு மார்ச் 21ந் திகதி செர்பிவில் என்ற நகரில் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் மீது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது 80 பேர் உயிரிழந்தனர். அதன் பின்னர் அத்தினமே இனவாதத்தையும் இனப்பாகுபாட்டையும் ஒளிப்பதற்கான சர்வதேச தினமாகக் கொண்டாடப் படுகின்றது.

எஸ் சுதாகரன்
இணுவில்.

கே: மண்கிண்டிமலை தாக்குதலின் வெற்றியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: வெற்றிமீது வெற்றி வந்து நம்மைச் சேரும்.

கி. செல்மர் எமில்,
ஊர்காவற்றுறை.

கே: இன்றைய உலகில் அறிவியல், விஞ்ஞானத்துறையின் அபார வளர்ச்சிபற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஆக்கத்துக்குப் பயன்படவேண்டும் என்று நினைக்கிறேன்.

மு. சதாசிவம்,
கைதடி.

கே: அரபி பாஷா என்பவர்யார்?

ப: எகிப்து நாட்டைச்சேர்ந்தவர். 1882ம் ஆண்டு பிரித்தானிய அதிகாரத்துக்கு எதிராக எகிப்தில் இடம்பெற்ற கிளர்ச்சிக்குத் தலைமைதாங்கியதால் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டார். 1901 வரை இலங்கையில் தங்கியிருந்து இலங்கை முஸ்லிம்களின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டார்.

ம. நந்தகுமார்,
யாழ்ப்பாணம்.

கே: காந்தருவம் என்றால் என்ன?

ப: பத்துத் திருமண வகைகளைப் பற்றிச் சாத்திரங்கள் குறிப்பிடுகின்றன. காந்தருவம் அவற்றுள் ஒன்று. கொடுப்பாரும் கொள்வாரும் இன்றித் தலைவனும் தலைவியும் தாமாகச் சந்தித்து கூடுதல் இதுவாகும்.

## பதலவன் பதில்கள்

செல்வி க. கலாறஞ்சினி,
யா/செம்பியன்பற்று
அ மி. த. க. பாடசாலை.

கே: முத்தமிழ் மூதாட்டி ஔவை 'தையல் சொல் கேளாதே' என்று கூறியிருப்பது பெண் ஒடுக்குமுறையின் ஒரு வடிவமாக இல்லையா?

ப: இது ஔவை சொன்னதா? யார் சொன்னாலும் பெண் ஒடுக்குமுறையின் வடிவம் தான்.

க. கமலகரன்
மானிப்பாய்.

கே: ஏதுநிகழ்ச்சி என்பது என்ன?

ப: பின் நிகழப்போகும் செயலுக்கு அடையாளமாக முற்படத் தோன்றும் காரண நிகழ்ச்சி.

எஸ். குணேஸ்வரன்,
கெருடாவில்,
தொண்டைமானாறு.

கே: லஞ்சக்குற்றம் இந்தியத்தலைவர்களிடமும் சென்று விட்டதே!

ப: இந்தியத் தலைவர்கள் அதிமானுடர் என்று நினைத்துக் கொண்டிருந்தீரோ?

கு. வேதநாயகம்,
நல்லூர்.

கே: அதர்வண வேதம் இந்துக்களால் ஒதுக்கி வைக்கப்பட்டது என்பது உண்மையா?

ப: எனக்குத்தெரியாது. ஆனால், கேரளத்து நம்பூதிரிகள் அதர்வண வேதத்தை இழிவானது என்று கூறி ஒதுக்கித் தள்ளியிருப்பதாக அறிந்திருக்கிறேன்.

க சதாசிவம்,
சாவகச்சேரி.

கே: இடதுசாரிகள் எனப்படும் அனைவரும் கடவுள் நம்பிக்கை அற்றவர்களா?

ப: கடவுள் நம்பிக்கை அற்றவர்கள்தான் இடதுசாரிகளாக இருக்கலாம் என்ற நியதி இல்லை.

## சிங்களவரைக் குடியமர்த்தி... (12பக்கத் தொடர்ச்சி)

1953 ம் ஆண்டு சித்திரைத் திங்கள் பிற்பகுதியில் தலைமை அமைச்சர் டட்லி சேனநாயக்காவோடு - நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருபத்து நால்வரும்; அமைச்சர் சிலரும், கல்லோயாக் குடியேற்றத்திற்கு உலாச் சென்றிட்டதும் ஒரு சம்பவமாகும்.

ஏ. ஏ. ஆரியசேனா சாவுற்று ஓராண்டு முடிவடையுமுன்னமே கல்லோயா அபிவிருத்திச் சபைத் தலைவர் கே. கனகசிங்கம் - பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

கலகவேளையில் - தமிழர்களைக் கொலைசெய்வதற்காக - அதிகமான சிங்கள வன்முறையாளர்களை வெளியிடத்திலிருந்து அழைத்துக் கொள்ள-கல்லோயா அபிவிருத்திச் சபைக் குரிய வாகனங்களை கே. கனகசிங்கம் உடன் உதவவில்லை என்று அமைச்சர்களிடம் கல்லோயாச் சிங்களக் குடிகள் முறையிட்டிருந்தனர்.

அப்படியிருந்தும் - சிங்கள வன்நெறியாளர்களை ஊக்கப்படுத்தித் தமிழர்களை வாழிடம் விட்டு ஓடச் செய்தார் என்ற வெறும் பாரத்தைச் சுமந்தபடி-சிங்கள அமைச்சரின் பதவி விலக்கல் கட்டளையைப் பெற்றவாறு கல்லோயா அபிவிருத்திச் சபையைவிட்டு வெளியேற்றப்பட்டார் அத்தமிழர். (வளரும்)

சிறுகதை

அந்தச் சின்னச்சிறு குடிசையில் அவலக்குரல் கேட்கத் துவங்கி அரைநாள் ஆகிவிட்டது. அழுதழுது வீங்கிப்போன கண்களோடு தனது குடிசையை ஒரு முறை கவனித்தாள் சவுந்தரம். துக்கம் விசாரிக்கவெனத் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என்று பெண்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. குடிசையின் முன்றலில் பந்தல் ஒன்று போடப்பட்டிருந்தது. அங்கு ஆண்கள் கூட்டம் வெற்றிலையைக் குதப்பியபடியும், சுருட்டுக்களைப் புகைத்தபடியும் கதை அளந்து கொண்டிருந்தனர். யார் இந்த ஏற்பாடுகளைச் செய்திருப்பார்கள்? என்று ஒரு கணம்யோசித்தாள். மறுபடியும் அவளது பார்வை தன் மகளைநோக்கித் திரும்பியது.

''ஐயோ! என்ரை ராசாத்தி. என்னை ஏமாத்திப் போட்டுப் போட்டியே!'' என்று சொல்லிக் கதறியவாறு தலையிலடித்துக் கொண்டாள். யாரோ பக்கத்தில் இருந்தவர்கள் அவளது கைகளைப் பிடித்துக்கொண்டனர். தமக்கையின் உடலின்இருமருங்கிலும் குந்தியிருந்த சவுந்தரத்தின் மற்றப் பிள்ளைகள் இருவரும் தாயின் செயலைக் கண்ணுற்றதும், ஓ! -வெனக் குரலெடுத்து அழுதனர்.

''அக்கா! எழும்பக்கா! எழும்பி உன்ரை புதுச் சட்டையைப் பார் அக்கா'' என்று கூறி, சவுந்தரத்தின் இளைய மகள் கோகிலா கேவிக் கேவி அழுதாள்.

''ஏனக்கா பேசாமக்கிடக்கிறாய்! எழும்பனக்கா!'' என்று அவளது பத்து வயதுத் தம்பி குகன் கதறினான்.

இந்தக் காட்சியைக் கண்ணுற்ற சில பெண்கள் தங்கள் கண்களைத் துடைத்துக் கொண்டனர். சிலர் துக்கம் தாளாமல் விம்மினார்கள் இத்தனைக்கும் மல்லிகா, அவள் தான் சவுந்தரத்தின் மூத்த மகள் ஆட்டமின்றி, அசைவின்றி வாங்கில்நிம்மதியாகசயனித்திருந்தாள். அவளது பூ மேனியைப் புதுச் சட்டை அலங்கரித்திருந்தது. அவளது உடலை மார்புவரை வெள்ளைத் துணியால் போர்த்தியிருந்தார்கள்.

அன்று காலை வரை துள்ளித் திரிந்தவள்தான் மல்லிகா. மின்னாமல் முழங்காமல் வந்த மழையைப் போல திடீரென வந்த சிங்கள அரசின் 'புக்காரா' விமானம் வீசிய குண்டிற்குப் பலியாகிவிட்டாள் அந்தப் பேதை. அவளுக்கென்ன போய்விட்டாள். போயே விட்டாள். ஆனால் சவுந்தரம் .. எப்படி மறப்பாள் தன் மூத்த மகளை. எந்த நேரமும் அக்கா! அக்கா! என வளையவரும் தம்பியும் தங்கையும் எப்படித்தான் ஆறப்போகிறார்கள்?

தென்ன மரவாடி தான் அவர்களது சொந்தக் கிராமம். சவுந்த

# புதுச்சட்டை

ரம் பிறந்தது, வளர்ந்தது, கணவனுடன் வாழ்ந்தது எல்லாமே அங்குதான். ஆறு ஆண்டுகளின் முன்னர் சிங்கள வெறியர்களின் அட்டூழியத்தால் கணவனை இழந்த அவள், உயிருக்கு அஞ்சித் தன் பிள்ளைகள் மூவருடன் மக்களோடு மக்களாக இடம்பெயர்ந்து வந்து



தண்ணீரூற்று சீ. சீ. பாடசாலையில் அகதியாகச் சிலகாலம் தங்கியிருந்தாள். பின்னர் அவ்வூரில் உள்ள ஒரு பெரியவரின் அனுசரணையால் இச்சிறு குடிசையில் குடியேறினாள்.

கணவன் உயிருடன் இருக்கும் போது ஓஹோ! என்று இல்லாவிட்டாலும் ஓரளவு வசதியாகச் சவுந்தரத்தின் வாழ்க்கையெனும் வண்டிஓடிக்கொண்டிருந்தது. கணவனையிழந்து அகதியாக வெளிக்கிட்ட பின்னர், அவள்பாடு பெரும் கஷ்டமாகிவிட்டது. சுகாதாரவசதியின்றி அகதிமுகாமில் இருந்த போது கைக்குழந்தையாயிருந்த மகன் குகனை அவள் நோய்களிலிருந்து மீட்கப்பட்டபாடு சொல்லில் அடங்காது. இப்போதும் நாட்டின் பொருளாதார நெருக்கத்தால் அன்றாடம் வயிற்றைக் கழுவுவதே பெரும்பாடாகிவிட்டது. கிடைக்கும் நிவாரணத்துடன் தன்னால் இயன்ற கூலி வேலைகளைச்செய்து வெகுசிரமப்பட்டுக் காலத்தை ஓட்டி வந்தாள்.

சென்றவருடம் வைகாசிப்பொங்கல் நாள். ஊரே விழாக்கோலம் பூண்டது. இளையோர் முதல் முதியோர் வரை புத்தாடை பூண்டு புதுப்பொலிவுடன் பொங்கலுக்குப் புறப்பட்டனர், சவுந்தரத்தின் பிள்ளைகள் மூவரும் வறறாப்பளை

'மலரன்னை'

அம்மனிடம் போவோர் வருவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். மல்லிகாவுக்குத் திடீரென ஒரு ஆசை முளைவிட்டது. தானும் புதுச்சட்டை போட்டுக் கோயிலுக்குப் போக வேண்டுமென விரும்பினாள்.

''அம்மா, எல்லாரும் என்ன வடிவாய் வெளிக்கிட்டுக்கொண்டு கோயிலுக்குப் போகினம் எனக்கும் புதுச்சட்டை போட்டுக் கொண்டு கோயிலுக்குப் போக வேணும் எண்டு ஆசையாயிருக்குதம்மா''

அன்றாடச்சாப்பாட்டிற்கேதிண்டாடும் சவுந்தரம் என்ன செய்வாள். பாவம்! அவளால் பெருமூச்சு ஒன்றைத்தான் விடமுடிந்தது. சிறிது நேர யோசனையின் பின் மெல்லச் சொன்னாள்.

''பிள்ளை மல்லிகா, நான் என்னடி செய்யிறது. எங்கடை நிலைமை உனக்குத் தெரிஞ்சதுதானே. எண்டாலும் உவர் புடவைக் கடைக்காரக் கந்தையா அண்ணையிற்றை ஒருக்காக் கேட்டுப் பாப்பமெண்டு நினைக்கிறன். கடனாய் உனக்கு அளவான ஒரு சட்டை தரச்சொல்லி. ரெண்டு

மூண்டு தவணையில கொஞ்சம் கொஞ்சமாய்க் காசைக் குடுத்திடலாம்''

சொல்லியவள் புடவைக்கடைக்குப் புறப்பட்டுவிட்டாள். மல்லிகாவுக்கும் மனதில் சிறிது நம்பிக்கை துளிர்விட்டது. ஒரு கணப்பொழுதில் புதுச் சட்டையுடன் கோயிலுக்குப் போய் வந்துவிட்டாள், கற்பனையில். கடைக்குப் போன அம்மாவின் வரவை ஆவலுடன் பார்த்துநின்றாள். தூரத்தில் சவுந்தரம் வரும்போதே அவளது சோர்ந்த முகத்தையும், நடையையும் கண்டு விஷயத்தை விளங்கிக்கொண்டாள் மல்லிகா.

''பிள்ளை, நானும் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுப்பார்த்தனடி. மனுசன் ஒரேபிடியாய்த் தரமாட்டனெண்டிட்டுது. கடன் குடுக்கிறதில்லை எண்டு வைராக்கியம் வச்சிருக்குதாம். அந்த வைராக்கியத்தைக் குழப்பேலாதாம்'' சொல்லியவாறே தனது ஆற்றாமையைப் பார்வைமூலம் வெளிப்படுத்தினாள்.

தாயின் பரிதாப நிலையை உணர்ந்து கொண்ட மல்லிகா, ''அம்மா உதுக்கேன் கவலைப்படுறியள். விட்டுத் தள்ளுங்கோ. நான் அடுத்த வருசப்பொங்கலுக்கு என்ரை கையாலேயே உழைச்சுப் புதுச்சட்டை வாங்கிப் போட்டுக் கொண்டுதான் போவன்'' ஏதோ சபதம் செய்வதுபோலக்கூறினாள்.

இப்பொழுதெல்லாம் மல்லிகா, லீவு நாட்களிலும், ஓய்வு நேரங்களிலும் அயல் வீடுகளில் போய் கச்சான் உருவுதல், கச்சான் உடைத்தல் போன்ற வேலைகள் செய்து, அதில் கிடைக்கும் சிறு ஊதியத்தை ஒரு பேணிக்குள் போட்டுச் சேமிக்கிறாள். சில சமயங்களில் தோட்டங்களிலும் போய் வெங்காய நடுகை, மிளகாய்ப்பழம் பிடுங்குதல் போன்ற வேலைகளும் செய்து உழைப்பைப் பெருக்கினாள்.

இந்த வருடமும் பொங்கல் நெருங்குகிறது. மல்லிகா தான் பணம் சேமித்து வைத்திருந்த பேணியை எடுத்து திறக்கிறாள். தாள்களாகவும், சில்லறைகளாகவும் கிடந்த பணத்தை எண்ணிப் பார்க்கிறாள் 'முன்னூற்றிச் சொச்சம்தான் இருக்கு, சட்டை வேண்டக் காணுமோ தெரியேல்லை' அவளது வாய் முணுமுணுக்கிறது. பக்கத்து வீட்டுக் கல்யாணி அக்காவிடம் ஓடுகிறாள். ''அக்கா, எனக்கு 'றெடிமேட்' சட்டை வாங்கிறதெண்டா எவ்வளவு காசு வேணும்?'' கல்யாணி அக்கா சொல்லுகிறாள் ''மல்லிகா! சட்டையள் எண்டாப் பல விலையிலும் இருக்கு. நீ எவ்வளவு காசு வைத்திருக்கிறாய்?''

''அக்கா, என்னட்டை முன்னூற்றிப் பதினைஞ்சுரூபாய்தானிருக்கு. காணுமே அக்கா?''

''அப்பிடியெண்டால் ஒண்டு செய்யன். துணியை வேண்டித் தைக்கக் குடுத்தால் மலிவாயிருக்கும்''.

''அக்கா நான் உங்களிட்டைக் காசைத்தாறன் நீங்களேவேண்டித் தைப்பிச்சு தாறியளே? எனக்கு எவ்வளவு துணி வேண்டுறதெண்டும் தெரியாது.''

மல்லிகா காசைக் கல்யாணியிடம் கொடுத்தாள். துணி வாங்கித் தைப்பிக்கும் பொறுப்பை அவளிடமே விட்டுவிட்டாள். இப்போது மல்லிகாவுக்கு எந்நேரமும் புதுச்சட்டை நினைவுதான். அடிக்கடி தாயிடமும், தம்பி, தங்கையிடமும் அதைப்பற்றித்தான் கதைப்பாள் இரவில் படுத்துறங்கினாலும் புதுச்சட்டை பற்றிய கனவுதான் வந்து கொண்டிருந்தது. சவுந்தரத்துக்கும் தனது மகளின் ஆசை நிறைவேறுவதில் ஓரளவு மனதிருப்தி. பொங்கலுக்கு இன்னும் மூன்று நாட்களே இருந்தன. தனதுசட்டை தைத்துவந்து விட்டதா? என்று பார்க்கும் ஆவலில் மல்லிகா அடிக்கடி கல்யாணி வீட்டிற்குப் போய் வந்தாள்.

எப்போதும் போலத்தான் அன்றும் பொழுது விடிந்தது, சவுந்தரம் நித்திரையால் எழும்பு முன்னரே மல்லிகா நேரத்தோடு எழும்பி விட்டாள். மல்லிகாவுக்கு இருப்புக்கொள்ளவில்லை. அவளது சட்டை தைத்து முடிந்துவிட்டதாம். இன்று கல்யாணி அக்கா அதைப்போய் எடுத்துவருவதாகக் கூறியிருந்தாள். தனது சட்டை எப்படி இருக்கும்? வடிவாய் இருக்குமோ? தனக்கு அளவாயிருக்குமோ? என்றெல்லாம் பேதையின் உள்ளம் பேதலித்துக் கொண்டிருந்தது.

அவளது காதுகளுக்குள் ஒரு இரைச்சல்.... அது வர வர மிக நெருக்கமாகக்கேட்டது. அண்ணாந்து பார்த்தாள். பிளேன் ஒன்று வட்டமடித்துக்கொண்டு வந்தது. இன்னொரு விமானம் எதிர்த்திசையிலிருந்து வந்து வட்டமிட்டது. அவளுக்கு விளங்கிவிட்டது. பொம்மர் தான்!

'இங்கினேக்கதான் எங்கையோ போடப்போறாங்கள்போலகிடக்கு என எண்ணியவளின் உடல் ஒரு முறை நடுங்கியது. சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒருதலைக்கறுப்பையும் காணவில்லை. அவள் ஓடத் தொடங்கினாள் கடை வரிசையில் உள்ள மேல்மாடிக்கட்டிடத்துக்குக் கீழே போய்க் குப்புறப் படுத்துக் கொண்டாள். அவளது நெஞ்சு பக்! பக்! என அடித்துக்கொண்டது. அவளது நினைவில் அம்மா, தம்பி, தங்கை எல்லோரும் வந்து போயினர் அவளது புதுச்சட்டையின் நினைவு வந்தபோது ..... பிளேன் பதிவதுபோல் இரைச்சல்கேட்டது. டும்! .. டுடும்!

சத்தம் காதைப் பிளந்தது. ஆனால் மல்லிகாவுக்கோ எதுவும் தெரியவில்லை. தெரியாமலே போய்விட்டது. நிரந்தரமாய்.

மாடிக் கட்டிடத்திற்கென்றே குறிவைத்துப் போடப்பட்டகுண்டு சற்றுத்தள்ளி வீழ்ந்து வெடித்ததால், குண்டுச் சிதறல்கள் பரவிப் பறந்ததில் ஒன்று அவளின் மூளையைத் துளைத்து விட்டது. புதுச் சட்டைக் கனவுடன் பேதை பேசா மடந்தையாகி விட்டாள்.

அங்கே ...... பொம்மர் குண்டு போட்ட சத்தம் கேட்டுச் சவுந்தரம், கடைக்குப்போன 'மகளைக் காப்பாற்று' என்று எல்லாத்தெய்வங்களிடமும் வேண்டிக் கொண்டிருந்தாள் இங்கே மகளோ! ...... தெய்வத்திடமே போய் விட்டிருந்தாள்.

தெய்வத்திடம் போகப் புதுச் சட்டை கேட்டவள்... இங்கு புதுச்சட்டையுடன் புறப்பட்டுவிட்டாள்... சுடலையை நோக்கி ..

சுத்தமான, தரமான, சுவையான

அப்பளம்!

## ஆனந்தம் அப்பளம்

ஒருமுறை சுவைத்துப் பாருங்கள்

பிறகு விடவே மாட்டீர்கள் !

# ஆனந்தம் அப்பளம்

கைதடி.

---

கைதடியில்

பலசரக்கு, பால்மா மற்றும் அன்பளிப்புப் பொருட்களுக்கு

நீங்கள் நாடவேண்டிய இடம்

## ரஜீவன் ஸ்ரோர்

தரமான பொருட்களை

நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

# ரஜீவன் ஸ்ரோர்

அப்பன் வீதி - கைதடி.

"சேக்.. இந்தக் கணிதம் என்டாலே எனக்கு ஒரு அலேஜி..."

"ஓமப்பா...! கணிதம் மட்டும் இல்லாததாலை தான் அநியாயம் ஏ. எல். கூடப் படிக்க முடியவில்லை..."

"நான் எத்தனை பேரிட்டை ரியூசனுக்குக் கூடப் போயிருப்பன்... காசுதான் அநியாயமாக் கரைஞ்சு போச்சு... கணிதம் மட்டும் ஏறவில்லை..."


"என்ன பார்க்கிறியள்?... வாருங்கள் உள்ளேயே வந்து இதனைப் பார்க்கலாம்..."

வாசலில் நின்ற அந்தப் பெண்மணி சிரித்துக் கொண்டே என்னை உள்ளே அழைத்தார்.

"அம்மா... நீங்கள் யார்?..." அடக்க முடியாத ஆவலுடன் கேட்டுக் கொண்டே, அவரைப் பின் தொடர்ந்து உள்ளே சென்றேன்.

மெதுவாக நான் வந்த நோக்கத்தை அவரிடம் சொல்லிக் கொண்டே அந்தக் கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தை நோக்கிக் காலை வைத்துக்கொண்டிருந்தேன்.

"அம்மா!... கணிதம் ஒரு சில மாணவர்களுக்கு கஷ்டமான ஒரு பாடமாக இருப்பதாகக் கூறி அந்தப் பாடத்தையே வெறுக்கத் தொடங்கி விட்டார்களே...



# கணித, விஞ்ஞான மூலவள நிலையம் ஒரு நேரடி அனுபவம்...



ஆம்...! இன்றைய மாணவர்களின் ஏக்கங்கள்!... உள்ளத்தில் இருந்தும் எழும் பெருமூச்சுக்கள்...!

கணிதம்...!
கணிதம்...!...!
கணிதம்...!...!...!

மாணவர் உலகம் மட்டுமின்றி வேலையுலகெங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்த வேளையில் 'யாழ் மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம்' அரும்பணியாற்றுகின்றது என்பதை அறிந்து, அங்கே சென்றேன். இருபாலைச் சந்தியில் இருந்து, மேற்கே செல்லும் பாதையில் கோப்பாய் கல்வியியல்... யாலதத்தின் முன், கம்பீரமாகத் தோற்றம் அளித்துக் கொண்டிருந்த 'யாழ் மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம்' என்ற அந்தப் பெயர் பலகையைக் கண்டதும், அங்கேயே நின்றுவிட்டேன்.

"என்னுடைய பெயர் அருளேஸ்வரி வேதநாயகம்...! விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றுகின்றேன்... இப்போ இந்தக் கணித மூலவள நிலையம் மூலம் மாணவர்களுக்கு எளிய முறையில், கணிதத்தைப் புகுத்துவதற்கான வேலைத் திட்டங்களையும், ஆய்வுகளையும் மேற்கொண்டு வருகின்றோம்... ஆமாம்... நீங்கள் யார் என்று சொல்லவில்லையே...?"

சுருக்கமான விவரணத்துடன், தன்னைப் பற்றிய விபரத்தை முடித்துவிட்டு, என்னைக் கேள்விக் குறியுடன் உற்று நோக்கினார்.

"அம்மா...! நான் 'சாளரம்' சஞ்சிகையில் இருந்து வருகின்றேன்... கணித மூலவள நிலையம் பற்றிக் கொஞ்சம் அறிந்து போகலாம் என்று வந்திருக்கின்றேன்..."

இந்த நிலையில் கணிதம் எங்களுக்குத் தேவையா? கணிதத்திற்காக மட்டும் ஏன் இப்படி ஒரு மூலவள நிலையத்தை ஆரம்பித்து நடத்துகின்றீர்கள்?

என்னுள்ளே பொங்கிப் பிரவாகித்துக் கொண்டிருந்த ஆவலும், மாணவர்களின் ஏக்கப் பெருமூச்சுக்களும் என்னை இப்படி ஒரு கேள்வியைக் கேட்க வைத்து விட்டது.

"என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள்? இன்று கணிதம் இல்லாமல் வாழ்க்கை இல்லை என்ற அளவுக்கு கணிதம் எங்களுடைய வாழ்வோடும், வளத்தோடும் பின்னிப் பிணைந்து விட்டது - சுருக்கச் சொன்னால், எங்களுடைய மாணவர்கள் படிக்கின்ற ஒவ்வொரு பாடத்திலும் கணிதம் இழையோடிக் கொண்டுதானே இருக்கின்

றது... வர்த்தகத்தில்... விஞ்ஞானத்தில் .. இப்படி எல்லாத் துறைகளிலும்...''

''தமிழிலும் கூட வா?'' அவரை இடைமறித்துச் சிரித்துக் கொண்டே கேட்டதும், அவருக்குச் சிரிப்புவந்திருக்க வேண்டும். உதட்டுக்குள் சிரித்துக் கொண்டே,

''ஓ.. ஏன் இல்லை... முத்தமிழ், நால்வர், ஐவகை நிலம், அறுவகைச் சமையம், ஏழு சுரம், எட்டுத்தொகை, நவக்கிரகம், பத்துப்பாட்டு .. பதினெண் கீழ்க்கணக்கு... இப்படியே ..'' பதிலுக்குச் சிரித்துக்கொண்டே, அவரும் கூறிக்கொண்டிருந்தார்.

''இது மட்டுமல்ல... தொழில் தேவைக்குக் கூட கணிதம் தேவை... இன்று ஒரு கடையில் கூட வேலைக்குப் போனால், முதலாளி அவனைப் பார்த்து கணிதம் தெரியுமா? க. பொ. த. பரீட்சையில் சித்தியா? என கேட்டுத்தான் வேலைக்குச் சேர்த்துக் கொள்கின்றார்.''

அவர் கூறிக் கொண்டிருக்கும் பொழுதே கணித மூல வள நிலையத்தின் உள்ளே சென்று அங்கே வைக்கப்பட்டிருந்த கணித உபகரணங்களையும், கணித மாதிரி உருக்களையும் மேலோட்டமாகப் பார்க்கத் தொடங்கினேன்.

பழையதகரங்கள், பிளாஸ்ரிக் மூடிகள், மரங்கள், கடதாசி அட்டைகள், பன்னிறக்காய்கள், இரும்புக்கம்பிகள்......... இவை தான் அந்த மூல வள நிலையத்தின் மூல வளங்கள்..... திருமதி. அ. வேதநாயகம் மற்றும், கணித ஆசிரிய சேவைக்கால ஆலோசகர்கள் கணித ஆசிரியர்கள் இவர்கள் தான் அந்த மூலவள நிலையத்தின் மூளை வளங்கள்.

மூலவளமும், மூளைவளமும் ஒரு இடத்தில் ......... அது தான் இந்த கணிதமூலவள நிலையம்...!


கணிதத்தைக் கற்பிக்கின்ற முறையில் ஏற்பட்ட தவறுகளோ அல்லது விளங்கிக் கொள்வதில் ஏற்பட்ட குளறுபடிகளோ தெரியவில்லை, அன்றுதொடக்கம் இன்றுவரை பெரும்பாலான மாணவர்கட்கு கணிதம் ஒரு கசப்பான பாடமாகவே மாறிவிட்டது. உயர் கல்வித் துறைக்கோ, அல்லது வேலைவாய்ப்புகளுக்கோ கணிதம் இன்று அத்தியாவசியமான, கட்டாய பாடமாகிவிட்டது. அந்த .....கணித கசப்புணர்வுகள் மாணவர்கள் மனங்களில் இருந்தும், ஆசிரியர் உள்ளங்களில் இருந்தும், அகற்றப்படவேண்டும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும், கணிதம் வெறும், வகுப்பறைக் கற்பித்தலாக வெண்கட்டியும், கரும்பலகையும் மாத்திரம் கொண்டு கற்பிக்கும் முறை மாறி, விளையாட்டு மூலமும், செய்து பார்த்தல் மூலமும் கணிதத்தை இலகுவில் புரியக்கூடிய முறையிலும், விரும்பக்கூடிய முறையிலும் கற்பிக்க முடியும் என்பதைக் கூறி செயல்மூலம் காட்டிய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. தேவநாயகத்தின் பணியும். பங்கும் அளப்பரியது.

''இந்த மூலவள நிலையம்போன்று ஒவ்வொரு கோட்டத்திலும் ஆரம்பித்துவருகின்றோம். இப்படியே யாழ் கோட்டத்தில் பெரியபுலம் மகாவித்தியாலத்திலும், பாடசாலை மட்டங்களில் திருக்குடும்பக் கன்னியர்மடம், உடுவில் மகளிர்கல்லூரி, கோப்பாய் சரவணபவன் வித்தியாலயம் என்பவற்றில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடமராட்சிக் கோட்ட மட்டத்தில் கரணவாய் பொன்னம்பல வித்தியாலத்திலும் மற்றும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, வல்வை கணித வட்டத்தினராலும் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.... இப்படியே இந்த முயற்சியானது யாழ் மாவட்டம் எங்கும் விஸ்தரிக்கவேண்டும் என்பதே எங்கள் எல்லோருடைய விருப்பமும் ... கணிதத்தில் சித்திபெறவில்லையே என்பதற்காக ஒரு மாணவன் தன்னுடைய உயர்கல்வித் தகமையை இழந்துவிடக் கூடாதல்லவா...?''

ஆதங்கத்துடன் கூறிக் கொண்டே என்னை அந்த கணித ஆய்வுகூடத்தின் தென் கிழக்குப் பகுதியில் இருந்த பெரியதொரு வரைவுப் பலகையை நோக்கி அழைத்துச் சென்றார்.

வரைபு (Graph) என்ற அலகைக் கற்பிப்பதற்கு கரும்பலகையில் முதலில் சதுரக்கோடுகள் வரைந்து பின்னர் அளவிடைக்கேற்ப பிரித்து, வளைவுகளையும், நேர்க்கோடுகளையும் கீறுவதில் உள்ள பல சிரமங்களை இந்த வரைபு பலகையும் அதில் சதுர



அளவிடையில் ஆணிகள் அடித்து வர்ணம் தீட்டப்பட்ட அமைப்பும் நிச்சயம் குறைத்து எளிமையாக்கிவிடும் என்பதைக் கூறி, அதனை வைத்து எவ்வாறு வரைபையே அறிந்திராத மாணவர்களுக்கு இந்த அலகைக் கற்பிக்கமுடியும் என்பதை விளக்கிக் கூறினார்.

இது மட்டுமல்ல கணித கனவுருக்களின் மாதிரிகள், நீட்டலளவை, நிறுத்தலளவைக்கான கருவிகள், பைதாகரசின் தேற்ற மாதிரி உரு, வட்டத்தின் பாகைகள், திசைகள்கணித்தல்... அப்பப்பா...! சிறிது நேரம் நான் அங்கேயே மலைத்து நின்றுவிட்டேன்.

''கணிதத்தில் கூட இப்படியெல்லாம்படிப்பிக்கலாமா...!'' என்ற ஆச்சரியம் என்னை நிலைகுலைய வைத்துவிட்டது.

''இதற்கெல்லாம் ஏராளமாகப் பணம் தேவையே? பணத்திற்கு என்னசெய்கிறியள்? மாணவர்களிடம் ஏதாவது வசூலிக்கின்றீர்களா? அல்லது கல்வித்திணைக்களம் ஏதாவது உதவிகள் செய்கின்றதா?...''

அங்கே நிறைந்து கவர்ச்சியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்த அந்தக் கணித உருக்களைப் பார்த்து மலைத்துப்போய் நின்ற என்னால் அப்படி ஒருகேள்விக் கொத்தை, அவர் தலையில் சுமத்தாமல் இருக்க முடியவில்லை.

''என்ன! .. எங்களையும் சியூற்றறி மாதிரி நினைத்து விட்டியள்... மாணவர்களிடம் இருந்து ஒரு சதம்கூட வாங்குவதில்லை. அதனை நாங்கள் விரும்பவுமில்லை இப்போதைக்கு கல்வித் திணைக்களம் உதவி செய்யாவிட்டாலும் இந்த நிலையம் சிறப்பாகச் செயல்படும்போது நிதி உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஒன்றைச் செய்யத் தொடங்காமல் நாங்கள் நிதியைக் கேட்க முடியாதல்லவா?......''

நாசூக்காகத் தனது நிதிக்கஷ்டத்தை உணரவைத்தார்.

வடகிழக்கு மாகாண சபையில் இருந்து கல்விப்பணிப்பாளர்கள், செல்வி தி. பெரியதம்பி, திரு. சி. கமலநாதன் ஆகியோர் கூட இதனை வந்து பார்வையிட்டுச் பாராட்டிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது நிதியை மாகாண சபையில் இருந்து ஒதுக்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்......''

அவர் இதனைச் சொல்லும் பொழுதே பெருமிதத்தில் தலையைச் சிறிது நிமிர்த்திச் சிரித்துக் கொண்டார்.

அண்மையில் இந்த மூலவள நிலையத்திற்கு விஜயம் செய்த யாழ் பல்கலைக்கழக சிவில் பொறியியல் பேராசிரியர் வி. நவரட்ணராஜா அவர்களால் எழுதப்பட்ட குறிப்பை எனக்குக் காட்டினார்.

'இங்குள்ள உபகரணங்கள் கணித பாடத்தை மிக எளிமையாகக் கற்பிக்க உதவும். இதில் உள்ள மாதிரி உருக்கள் கணித எண்ணக் கருவை மேலும் இலகுவாக்க உதவும். இது மெல்லக் கற்போருக்கு மட்டுமின்றி, மிகத்திறன் உள்ள மாணவர்களுக்கும் கூடப் பயன்படும்''.

விருந்தினர் பதிவேட்டில் அவருடைய இந்தக் குறிப்பையே வலியுறுத்துவது போல், திருமதி . அ. வேதநாயகம்,

''கணித உபகரணங்களைப் பயன்படுத்துவதால் ஒரு மாணவனின் அடிப்படை ஆற்றல் விருத்தி செய்யப்படுகின்றது. கணிதத்தில் எல்லா அலகுகளுக்கும் இவ்வாறு செய்முறை உபகரணங்களைப் பயன்படுத்தமுடியும். குறிப்பாகக் கேத்திர கணித நிறுவல் தத்துவத்தின் அடிப்படை புரியாத மாணவர்களுக்கு இந்தப்பகுதி கசப்பாகவே இருக்கும் .. நாங்கள் நீண்ட ஆய்வு ஒன்றை நடத்தி, இனங்காணப்பட்ட அலகுகளுக்கு இத்தகைய மாதிரி உருக்களை அமைத்திருக்கின்றோம்... மாணவர்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை மாற்ற நாம் மேற்கொண்டுவரும் செயலமர்வுகள் உதவும் என்று நினைக்கின்றேன். நாங்கள் ஒரு அலகுக்கு உபகரணத்தைப் பயன்படுத்திக் கற்பிக்கின்றோமென்றால் நேரத்தையும் கூட மிச்சப்படுத்தி மேலதிக பயிற்சிகளையும் கூட மாணவர்கட்குக் கொடுத்துச் செய்ய வைக்கலாம்..... இதன் மூலம் எந்த மாணவனும் அன்னியப்பட்டு விலகிச் செல்ல முடியாது.''

அவர் இப்படிக் கூறியதும் எனக்கு வியப்பாக இருந்தது!

''என்ன அப்படிச் சொல்லுகிறியள்? கணித உபகரணத்தைப் பயன்படுத்துவதாயின், நேரம் வீணாகச் செலவாகும் என்றல்லவா பல ஆசிரியர்கள் கூறுகின்றனர்?''

''நீங்கள் நினைப்பதுதான் தவறு ... கரும்பலகை மூலம் மட்டும் கற்பிப்பதற்கு 30 மணித்தியாலம் தேவைப்படும் ஒரு அலகை போதிய கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்திக் கற்பிப்பதாயின் 2½ மணித்தியாலங்களில் தெளிவாகப் புரியவைத்து விடலாம்.... எஞ்சியுள்ள நேரத்தில்மூன்றில் ஒருநேரம் பயிற்

---

தெரிந்ததைத் தெரியுமென்றும் தெரியாததை தெரியாது என்றும் கூறுவதுதான் அறிவு.

— கன்பூசியஸ்

---

அறிவு என்பது நதியைப் போன்றது. அது எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அமைதியாக இருக்கும்.

— பேகன்

சுழிபுரத்தில் துரிதமாக சேவை புரியும்
ஓர் கிறைண்டிங் மில்

# அன்னை பராசக்தி கிறைண்டிங் மில்

அரிசி குற்றல், திட்டல், உடைத்தல்,
மாவு அரைத்தல், தூள் அரைத்தல்
பயறு உழுந்து திரித்தல்

♣

சகல வேலைகளையும் தரம் குறையாமல் செய்து தருபவர்கள்

# அன்னை பராசக்தி கிறைண்டிங் மில்

**பறளாய் வீதி, சுழிபுரம்**

சிகள் கொடுப்பதற்குப் போதும்...''

அவர் கூறியதை என்னால் நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.... என் கண்முன்னாலேயே அங்கே உள்ள கணித உருக்கள் உயிர் பெற்று நடமாடும் பொழுது எப்படித்தான் நம்பாமல் இருக்க முடியும்?

அல்லது இதில் இருந்துஅவருடைய எதிர்பார்ப்புகள், நிச்சயம், எதிர்காலத்தில் கணிதம் ஒரு இலகுவான பாடமாக மாணவர் மனங்களில் பதியும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்தது.

''இந்த மூலவள நிலயத்தை வளர்த்தெடுப்பதில், சிலரை உங்களால் மறக்கமுடியாதல்லவா?...'' நான் இப்படிக் கேட்டதும் ஒரு தர்மசங்கடமான ஒரு கேள்வியைக் கேட்டு விட்டதுபோல் என்னை ஒருமாதிரிப் பார்த்தார்.

ஓ-- நிறையப்பேர், என்னை ஊக்குவிக்கின்றனர். குறிப்பாக கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அவர்கள் எனக்குத் தேவையான போது வேண்டிய உதவிகளைச் செய்துதருவதில் பின் நிற்பதில்லை. அண்மையில் தனியார்துறை நிறைவேற்றுப் பணியகம் சேவைக்கால ஆலோசகர்களுக்கு வழங்கவென கணித உபகரணப் பெட்டிகள் செய்து தந்தனர்... இப்படி எத்தனையோ பேரை...''

இது ஒரு தர்மசங்கடமான கேள்விதான் என்பதை அவர் முகத்தில் இருந்து அறிந்து கொண்டேன்.

இறுதியாக அவர் இடம் பெயர் சேவைகள் பற்றிக் குறிப்பிட்டதும் எனதுநம்பிக்கை மேலும் அதிகரித்தது!

கிளிநொச்சி, வடமராட்சி கிழக்கு, தற்பொழுது வடமராட்சியில் உள்ள பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறும் கணித ஊக்குவிப்பு செய்முறை வகுப்புக்கள் எனப் பல்வேறு மட்டங்களில் கணித ஊக்குவிப்புக்கள் இடம்பெறுகின்றன.

''ஹாய்... இப்ப கணிதம் என்றால்தேன்மாதிரி...'' என்று மாணவர்கள் சொல்கிற நிலை விரைவில் வரும் என்று அவரிடம் கூறி, அவரதுசேவையை மனதாரப் பாராட்டிக் கொண்டு, அந்த மூலவள நிலையத்தில் இருந்தும் வெளியேறினேன். □

## கதை ஒன்று செய்தி இரண்டு

காலை 7.00 மணி.

வன்னி சர்வதேச விமான நிலையத்தில் மிகுந்த பரபரப்பு. வி.பி. 38 ரக 'விண்புயல்' வந்தடையும் நேரத்தை மக்கள் ஆவலுடன் எதிர் நோக்குகிறார்கள். அதோ – அடி வானத்தில் ஒரு கறுப்பு - சில வினாடிகளில் அது பேரிரச்சலுடன் விமான நிலையத்தில் தரை இறங்குகிறது.

தூர நாட்டுப் பிரயாணிகள் இறங்கவும் அவர்களின் நண்பர்கள், உறவினர்கள் அவர்களை வரவேற்கவும் தயாராகிறார்கள். விண்புயலின் கதவுகள் திறக்கப்படுகின்றன. மனிதர்களுடன் ஒரு நாயும் விண்புயலில் இருந்து வெளியே வருகின்றது. இல்லை இல்லை பாய்கின்றது. உலகம் சுற்றிப் பார்ப்பதற்காக அது கடந்த ஒரு வருடமாக நாட்டை விட்டுச் சென்றிருந்தது. அதனையும் வரவேற்க ஒரு பெரிய கூட்டம் - இதனைக்கண்டதும் அவைகளிடையே ஆரவாரம் குரைப்புகள்- வாலாட்டல்கள் – குதிப்புகள், பாய்ச்சல்கள் எல்லாம் நடக்கின்றன.

விண்புயல் பிரயாணம் சுகமாக இருந்ததா? வெளியூர் வாசம் எப்படி? உலகம் எப்படிப் பட்டது எனப் பலப் பல கேள்விகளுக்கெல்லாம் கணீர் கணீர் என்று பெருமையுடன் பதிலளித்தது உலகம் சுற்றிய நாய்.

இந்த நேரத்தில் ஒரு பெரியவர் அந்த நாயைத் தடவி 'நீ எத்தனை அதிஷ்டசாலி உலகத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்துள்ளாய்? அங்கு ஏதாவது உனக்கு பிரச்சினைகள் ஏற்பட்டதா என்றும் அப்பெரியவர் வினாவினார்? அதற்கு நாய் ''எங்கடை? ஆட்களால்தான் எனக்கு பிரச்சினை ஏற்பட்டது'' என்று குறிப்பிட்டது. பெரியவர் திகைத்துநின்றார்.

1987 இல் இங்கிலாந்திற்கு அகதிகள் அந்தஸ்து பெறமுயன்ற இலங்கைத் தமிழ் இளைஞர்ள் தமது முயற்சி கைகூடாத இறுதி நேரத்தில் அரை நிர்வாணமாக விமானத்தை நோக்கி ஓடினார்கள் இதன் பலன் அன்று கூடவில்லை.

1993 இல் கொஸ்ரறிக்காவில், இலங்கைத் தமிழ் இளைஞர்கள் அங்கிருந்து தம்மை வெளியேற்ற முனைந்தபோது முழு நிர்வாணமாக விமான நிலையத்தில் ஓடி தமது குறிக்கோளை நிறைவேற்றிக் கொண்டனர்.

# அரும்புகள்

● அகதிமுகாம் அடுப்படியில்
அழுது செய்த குறும்பின் பின்
அழகு நிலா முகச் சிறுமி
அருந்துமந்த மச்சத்தை!

வட்டவிழி வளைந்து மூடி
திட்டமுடன் தேடுவது
சுட்டமீனின் சுவைதானோ
இட்டமுடன் வேறெதுவோ!

பட்டாடை கட்டி நின்று
பம்பரமாய்ச் சுற்றி வந்து
''இட்டலி தான் வேணுமம்மா
இல்லையென்று சொல்லாதே''

பிடிவாதம் பிடித்து நின்ற
முந்திய நாள் நினைவலைகள்
பிள்ளையிவள் மனந்தன்னுள்
புகுந்ததுவோ இந்நேரம்!

புதிய வானம், புறாக்கள்
புதிய வயல்வெளி, புல்வெளிகள்
புதிய நிலா, புதுச் சூரியன்
புலருகின்ற எதிர்காலம்
புதிதாக வேண்டுமென்று
புதுமையான சிந்தனையோ?

— தே. குயின் சயிலா
ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

---

அமைதியாய்
அவதரித்த மலர் இவள்.
லகைளிலே சுட்டமீன்
இவள் இதயத்தைப் போலவே!
அகதி முகாமில் இவளின்
அவல நிலை புரிகிறது.
இருப்பினும்
அமைதியாய் இருக்கிறோம்.
அன்னை பூமியின்
நாளைய அரசி இவள்.
இவள் சிரித்து மகிழ
இன்னும் சில காலமே!

— அ. அனுசியா

சுட்டமீனை தொட்டு உண்ணும்
சிட்டே!
பசியால் வாடிய உன்வதனம்
சுட்டமீனைக் கண்டவுடன்
பட்டாக மாறியதோ?
கவலையை விடு
இன்று நீ அகதிமுகாமில்.
அதோ தெரிகின்றது வெளிச்சம்
கூடவே உன் வாழ்வும்!

— இ. பாமினி
கச்சாய் வீதி
சாவகச்சேரி

---

அவள்
அரசின் வன்செயலால்
அகதியாகி வந்திட்டாள்
அகதிமுகாமில் வாழ்ந்திட்டாள்
தொற்றுநோய்களின் இருப்பிடம்
நோய் காவிகளின் உறைவிடம்
வயிற்றுப்பசியின் வாழ்விடம்
இதுவே இவள் வதிவிடம்
அகதிகள் நிவாரணம்
அரைவயிற்றுக்கும் அடங்காமல்
போனதால் -
அரைவாசி அவிந்த மீனை
ஆவலுடன் புசிக்கின்றாள்.
எரியும் வயிற்றுள் புதைக்கின்றாள்!

— கதிரேசு கலாறஞ்சினி
செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை

---

பாலருந்தும் வயதினிலே
பாலகி குழந்தை இவள்
மீன் புசிக்கும் காட்சியது
மீளாமல் எமை வாட்டும்

இந்தநிலை இவளுடைய
வந்த கதி யாதென்றால்
வானரங்கள் தாம் வந்தே
வருத்துகிறார் யாவரையும்

சொந்தமில்லை பந்தமில்லை
சொல்லிக்கொள்ள யாருமில்லை
வெந்ததுவோ இளநெஞ்சு
வேதனைதான் தாளவில்லை.

இவள் போல எத்தனையோ
இளையோர்கள் வாடும் நிலை
இனிமேலும் வேண்டாமே
இதைச் சற்று சிந்தியுங்கள்.

அடிமைகளாய் ஆகிநிதம்
அழுதழுது வாழும் நிலை
அழகல்ல. அணிதிரண்டால்
அடைந்திடலாம் சுகவாழ்வை.

— கி. சஜீதா
மந்துவில்
கொடிகாமம்.

பெண்ணே
உன் மாமனும் அன்று
சுட்ட மீனைத் தின்றவன்தான்
காட்டு வாழ்க்கையில்.
நீயும் இன்று சுட்ட மீனுடன்!
அகதியெனும் தலைகுனிவை
உடைத்தெறி
தமிழனின் அகதி வாழ்வை
தகர்த்தெறி.

சிவஞானசுந்தரம் அநபாயன்
வல்வெட்டித்துறை



அம்மாவிற்கு தெரியாதோ
அவளாலும் முடியலையோ
அழகான கையாலே
அலாதியாய் நீ உண்பது
யாருக்கும் தெரியாதோ?
சூழ உள்ளவர்கள்
சூழலினை மறந்தனரோ?
நெய்தல் நிலக்கரையில்
நிறைவாக நீ உண்டு
நீண்டநாள் ஆகியதோ?
இதனால்தான் இப்படி நீ
சுட்டமீனதனை சுவைக்கின்றாயோ?
விளக்கம் சொல் விளைபொருளே
நீ வீரத்தின் வித்தல்லவோ !

— ப. தயாளன்

---

ஏ... எதிர்காலமே
இங்கே கொஞ்சம் திரும்பிப்பார்
எங்கே உனது உறவுகள்!
பசியால் மச்சத்தை
மலிவாய் உன்கிறாயே!

இங்கே மலிந்து கிடக்கும்
அகதி முகாம்களில்
அதிகமானவை பள்ளிக்கூடங்கள்!
ஆக்கிரமித்த சில பாடசாலைகள்
சிங்கள ராணுவ முகாம்கள்.
உனது பட்டறிவினை
நன்றாக பகிர்ந்து கொள்
நாளைய நாட்டை
உன்னிடம் தருவதற்கு!

— கிங்ஸ்லி
கோளாவிலூர்

ஓவிய வாக்கியம் பகுதிக்கு வாசகர்களிடமிருந்து ஏராளமான கவிதைகள் வந்து குவிகின்றன. உங்கள் ஆர்வத்திற்கு பாராட்டுக்கள், வாழ்த்துக்கள். கடந்த இதழில் வெளியான புகைப்படத்திற்கு வந்த கவிதைகளில் சிலவற்றை இங்கே பிரசுரித்துள்ளோம். ● புள்ளியிடப்பட்ட கவிதை பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

## தெறிப்பு

அன்புடன் ஆசிரியருக்கு. தங்கள் சாளரத்தினூடே புகுந்து வரும் காற்றலைகள் தாங்கிவரும் விடயங்களின் வாசகர்களில் நானும் ஒருவன். சமூக, இலக்கிய, அறிவியல் வளர்ச்சிக்கு தாங்கள் ஆற்றிவரும் பணிகளுக்கு என் வாழ்த்துக்கள்.

சாளரம் முதலாம் ஆண்டு இதழ்களின் தொகுப்பை நுகர்ந்திட ஆவல்! தொகுப்பிற்கும் அனுப்பும் செலவிற்கும் உண்டான தொகையை எங்கனம் அனுப்புவதென்று அறியத்தரவும். தங்களிடமிருந்து பல விடயங்கள் அறிந்து கொள்ள ஆவலாய் உள்ளேன்.

சி. சிறீதரன்
KINGSTON – SURREY
U.K.

சுவை, தரம் மிக்க உணவுப்பண்டங்கள்!

ஐசிங் கேக், பாண், பணிஸ், கல்பணிஸ்,
இவற்றை உங்கள் மனம் நாடும் போது
நினைவில் வரவேண்டிய ஸ்தாபனம்

◆

'சதா பேக் கவுஸ்'

ஓடர் வேலைகளும்

'பேக்' செய்து கொடுத்தலும்
உடனுக்குடன் கவனிக்கப்படும்

◆

சுவை தேடுவோர் தினம் நாடுவது

# 'சதா பேக் கவுஸ்'

மானிப்பாய் வீதி - உரும்பிராய்

'ஹைட்றோ புறடக்ஸ்' உங்களை அழைக்கிறது!

ஒப்பந்த வேலைகள், மரக் கொள்கலன்கள்,

இரும்பு நிர்மாண வேலைகள்

குடாநாட்டின் நம்பிக்கைமிகு

தொழில் நுட்பவியலாளர்கள்

'ஹைட்றோ புறடக்ஸ்'

HYDRO PRODUCTS

முதலாம் ஒழுங்கை,

தெல்லிப்பளை வீதி, வட்டுக்கோட்டை.

உங்கள் சுபகாரியங்களுக்கு

தங்க நகைகள் செய்யவேண்டுமா?

சாவகச்சேரியில்

வீ. எம். கே. ஜுவல்லர்ஸ்

நம்பிக்கை, நாணயம், தரம் மிகுந்த

அசல் 22 கரட் தங்கப் பவுண்களில்

விதம்விதமான நவீன டிசைன்களில்

நகைகள் செய்திட நாடுங்கள்

வீ. எம். கே. ஜுவல்லர்ஸ்,

கண்டி வீதி, சாவகச்சேரி.

## உங்கள் வெண்ணிற ஆடைகளுக்கு
## மேலும் பளிச்சிடும் வெண்மை தருவது

# மயில் நீலம்

ஒருமுறை உபயோகித்துப் பாருங்கள்
ஒளிவீசும் வெண்மையை உணர்வீர்கள்

# மயில் நீலம்

மங்கல் நிறமான ஆடையை
மாற்றி புதிய தூய்மை தருவது

# மயில் நீலம்

தயாரிப்பாளர்கள்:-

## நிம்மதி கடை

பலாலி வீதி, உரும்பிராய்